GOKULAM

# கோகுலம்


ரூ.6/-

ஜூலை 2004



# அடுத்தது என்ன?

# ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள் :
திமிங்கிலத்தின் கண்.
கொக்கின் இறகு.
அலை.
மீனின் செதில்.
தண்ணீர்.



# கோகுலம்


பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டுக்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் மேற்பார்வையில் அச்சிட்டு வெளியிடுபவர் : கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ், 47-என்.பி., ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஏகாம்பரம்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விபரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்






ஜூலை 2004 மலர் : 22 இதழ் : 6


# கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்



# அடுத்தது...

கவர் ஸ்டோரி

'அடுத்தது என்ன?' - இந்தக் கேள்வி வாழ்க்கையில் எல்லோருக்குமே வந்திருக்கும். அதிலும் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு பாஸ் செய்தவர்கள் முன் இந்தக் கேள்வி பெரிய அளவில் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

மாணவர்களை மட்டுமின்றி, பெற்றோர்கள், ஆசிரியர்களையும் கூட இந்தக் கேள்வி பாடாய்ப்படுத்துகிறது.

பத்தாம் வகுப்பு பாஸ் செய்தவர்கள் தங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய முடிவை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இதில் தான் நிறையப் பேரிடம் சிக்கல் ஏற்படுகிறது. ஒரு மாணவன் தனக்குப் பிடித்த சப்ஜெக்ட்டை பதினோராம் வகுப்பில் எடுத்துப் படிப்பதா? அல்லது பெற்றோர்களின் விருப்பமான பாடத்தை எடுத்துப் படிப்பதா? அதுவும் அன்றி நண்பர்கள், ஆசிரியர்களின் விருப்பப்படி பாடத்தைத் தேர்வு செய்வதா? என்று ஒரு குழப்பம் ஏற்படுகிறது. யார் சொல்வதை எடுத்துக் கொள்வது?

சென்னையைச் சேர்ந்த செந்தில்குமார் பத்தாம் வகுப்புத் தேர்வில் 78% மதிப்பெண் வாங்கியிருக்கிறார். செந்திலுக்கு நீண்ட நாட்களாகவே வணிகவியல் பாடத்தை எடுத்துப் படிக்க ஆசை. ஆனால் அவரின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் 'இவ்வளவு மதிப்பெண் வாங்கி, ஏன் வணிகவியல் எடுக்க வேண்டும்?' என்று கணிதப் பிரிவில் சேருமாறு கூறிவிட்டனர். செந்திலுக்கு மிகவும் வருத்தம். இருந்தாலும் பெற்றோர்கள் நம் நல்லதுக்குத்தான் சொல்வார்கள் என்று மனதைத் தேற்றிக் கொண்டு தயாராகிவிட்டார்.





திருச்சியைச் சேர்ந்த ஷர்மிளாவும் நல்ல மதிப்பெண் வாங்கியிருக்கிறார். அவரின் பெற்றோர் ஷர்மிளா விரும்பிய பாடத்தை எடுத்து படிக்க அனுமதி கொடுத்து விட்டனர். ஷர்மிளாவுக்கு அறிவியல் என்றால் மிகவும் விருப்பம். ஆனால் அவரின் தோழிகள் எல்லாம் தமிழ் இலக்கியத்தில் சேர, ஷர்மிளாவும் அதைத் தேர்ந்தெடுத்துவிட்டார்.

சென்ற வருடம் பத்தாம் வகுப்பு முடித்த கே. சுரேஷ் தனக்குப் பிடிக்காத சப்ஜெக்ட்டில் சேர்ந்து விட்டான். பள்ளி ஆரம்பித்து சில மாதங்களில் பெற்றோருக்குக் கூறாமல் கூட பள்ளிக்குச் செல்லவில்லை.

# என்ன?



ஃபிரெஞ்ச் தொடர்ந்து பள்ளிக்கு வராதது தெரிய வந்தது. அவனை விசாரித்தபோது பிடிக்காத சப்ஜெக்ட், படிக்க ஆர்வம் வரவில்லை என்ற பதில் கேட்டு பெற்றோர் அதிர்ந்தனர். மீண்டும் இந்த ஆண்டு ஃபிரெஞ்ச் தூக்கிப் பிடித்த சப்ஜெக்ட் எடுத்து படிக்க ஆரம்பித்திருக்கிறான். இதனால் ஒரு வருடம் வீண்!

இதைப் பற்றி பெற்றோர்கள் என்ன நினைக்கிறார்கள்?

"பையனுக்கு நல்லது கெட்டது எல்லாமே நாங்கள் தானே சொல்லித் தருகிறோம். என் பையன் நிறைய மார்க் வாங்கினான். இருந்தும் வேறொரு சப்ஜெக்டைத் தேர்ந்தெடுத்தான். நாங்கள் தான் அவனுக்குப் புரிய வைத்து கணிதப் பிரிவில் சேர்த்து விட்டோம். இப்பொழுது மிகவும் நன்றாகப் படிக்கிறான். இது எப்படி பெற்றோர்களின் விருப்பத்தைத் திணிப்பது போல் ஆகும்?" என்று கேட்கிறார் சரவணனின் அம்மா.

"பெற்றோர்களை விட மாணவர்களிடம் என்னைப் போன்ற ஆசிரியர்கள் தான் அதிகமாகப் பழகுகிறோம். ஒரு மாணவன் எதைத் தேர்ந்தெடுத்து படித்தால், எவ்வளவு பிரகாசிப்பான் என்பதைத் துல்லியமாக எங்களால் கூறிவிட முடியும். அனுபவம் இல்லாத மாணவர்களுக்கு நாம் தான் சிறந்தவற்றை வழி காட்ட வேண்டும். அது நமது கடமைதானே!" என்கிறார் ஓர் ஆசிரியர்.

மாணவர்களின் படிப்புத் திறனை மட்டும் வைத்து அவர்களின் ஒட்டுமொத்த திறமைகளை எடை போடக் கூடாது. அவர்களின் ஆர்வம், சிந்திக்கும் சக்தி போன்றவற்றையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்ற துறையை வழிகாட்டுவது நல்லது. எந்த ஒரு காரியமும் ஆர்வத்துடன் செய்தால்தான் சிறப்பாக அமையும். மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை மிகவும் முக்கியம். மற்றவர்களின் விருப்பத்தை மாணவர்கள் மீது திணிக்காமல் அவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், தோழர்களாகவும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் செயல்பட்டால் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்காது.

அட்டைப்படம் : நயனலக்ஷ்மி
வண்ணப்படம் : ஸ்ரீதேவி
கார்ட்டூன் : நடனம்

## அடுத்த இதழ் என்ன ஸ்பெஷல்?

கோதைக் ஆண்டாள் இதழ் திண்டுக்கல் நகரத்தில் உள்ள இரண்டு பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த மாணவர்களின் சிறப்பிதழாக வர இருக்கிறது. இதற்கென சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.


இடம் பெறும் பள்ளிகள் :
ஸ்ரீ வாசவி வித்யா மந்திர், எஸ்.எம். பிஎம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.

இந்த இரண்டு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் சுவையான படைப்புகளை கொடுத்து அசத்தப் போகிறார்கள்!

தொடர்ந்து பள்ளிக் கூடங்களின் ஸ்பெஷல் வர இருக்கிறது காத்திருங்கள்!

# மயில் செய்த





நீண்ட தோகையுடைய மயில் மாரிக்குத் தன்னைப் போல அழகுடையவர்கள் எவருமில்லை என்பதிலும், தன் தோகையைப் போல அழகானது எதுவும் இல்லை என்பதிலும் அசையாத நம்பிக்கை உண்டானதால், சற்று தலைக்கனம் கொண்டு அலைந்தது.


தன் நீண்ட தோகையை விரித்து ஆடிக் கொண்டிருந்த மயில் மாரியைத் தாண்டி குரங்கு குப்பண்ணா கையில் ஏதோ ஒன்றைப் பிடித்தபடி போக, அதன் பின்னாலே அணில் அய்யாச்சாமி, கழுதை காங்கேயன், காட்டெருமை கள்ளி ஆகியோர் செல்ல, மற்ற விலங்குகள் 'ஆ'வென வாயைப் பிளந்து வேடிக்கை பார்த்தன.

இந்தக் காட்சியைக் கண்ட மயிலுக்கு அவமானமாக இருந்தது. காட்டிலேயே மிகுந்த அழகுடைய தன் ஆட்டத்தைவிட குரங்கு குப்பண்ணாவின் கையில் உள்ள எந்தப் பொருள், விலங்குகளைக் கவர்ந்து இழுத்துச் செல்கிறது என்பதைக் காண விரும்பியது மயில் மாரி.

குரங்கு குப்பண்ணா கையில் ஒரு நூலைப் பிடித்தபடி சென்றது. அந்த நூலின் மறுமுனையில் அழகிய பட்டம் ஒன்று வானில் பறந்து சென்று கொண்டிருந்தது. இந்தக் காட்சியைக் கண்டவுடன் மயில் மாரிக்குத் தானும் இதே போன்று

# பட்டம்!

பா.முருகேசன்





வரிசையில் அடுத்தது
கருநீலம்
வானின் நீலம் மூன்றாவது
எந்தன் பட்டம் அழகானது''
என்று பாடிக் கொண்டே வந்த மயிலின் கண்களில் தகதகவென தங்க நிறத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த அரளி மலர்கள் தென்பட்டன. 'நண்பகல் வெயிலில் இந்த மலர்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன!' என நினைத்த அது, தன் பட்டத்தில் அடுத்ததாக அதைச் சேர்க்க வேண்டும் என்று முடிவு செய்தது. விரைந்து அந்த அரளிச் செடியிடம் சென்றது.

''தங்க அரளிச் செடியக்கா
தகிக்கும் வெயிலில் நீ அழகக்கா!
உந்தன் மலரின் தங்கநிறம்
எந்தன் பட்டத்தில் ஒட்டிடவே
எத்தனை அழகு அதில் கிடைக்கும்
என்றே நீயும் எண்ணிப் பார்'' என்று கூறி தனக்கு அரளி மலர்களைத் தருமாறு கேட்டது.

மயில் மாரியின் வேண்டுகோளைக் கேட்ட அரளிச் செடியும் தன் மலர்களை அள்ளிக் கொடுத்தனுப்பியது.

**வா**டாமல்லிச் செடியும் மயில் மாரியின் ஆசைக்கேற்றவாறு தன் மலர்களை அள்ளிக் கொடுத்து அனுப்பி வைத்தது. அதனைப் பெற்றுக் கொண்ட மயில் காட்டின் பாதையோரத்தில் பூத்துக் குலுங்கிய டிசம்பர் செடியைக் கண்டது. கருநீல மலர்களுடன் காணப்பட்ட டிசம்பர் செடியின் மலர்களைத் தன் பட்டத்தின் அடுத்த வண்ணத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் அதன் அருகில் சென்ற மயில் மாரி அதனிடம்,

''மார்கழி காலையில் இவ்வனத்தில்
மலர்ந்த டிசம்பர் பூச்செடியே
சீருடன் கரடி காவேரி
சிறப்புடன் செய்யும் பட்டத்தில்
கருநீல நிறத்தைச் சேர்த்திடவே
கனிவுடன் உன்மலர் எனக்குத்தா''
என்றது.

டிசம்பர் செடியும் மணமில்லா தன் மலர்கள் இதற்காவது பயன்படுத்தப்பட்டால் தனக்குப் பெருமைதானே என எண்ணி, நிறைய மலர்களை மயில் மாரியிடம் கொடுத்தனுப்பியது.

**ம**யிலுக்குத் தன் பட்டத்தில் மூன்றாவதாக வானத்தின் நீல நிறத்தைச் சேர்க்க வேண்டும் என்று ஆசை.

மலையின் உச்சியை அடைந்த மயில் மாரி அங்கிருந்தபடியே நீலவானத்திடம் தன் ஆசையைக் கூறியது. வானமும் தேவையான அளவு தனது நீல வண்ணத்தைத் தருவதாக ஒத்துக் கொண்டது.

மூன்று நிறங்களை எளிதாகப் பெற்றுவிட்ட சந்தோஷத்தில் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் வந்தது மயில் மாரி.

''வாடா மல்லி முதல் நிறமாம்

**அ**ங்கு நடந்ததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வாழை மரம் மயில் மாரியை அழைத்தது. ''உன் பட்டத்தில் என்னுடைய மலரின் நிறத்தையும் சேர்த்துக் கொள்'' என்றது.

தானாகவே முன் வந்து தனக்கு உதவி செய்ய விரும்பும் வாழையின் வார்த்தையைத் தட்ட முடியாத மயில் மாரி சிறிது யோசித்தது. பின்னர் வாழை மரத்தின் அதன் மலருக்குப் பதிலாக அதன் இலையின் பச்சை வண்ணத்தைச் சேர்த்துக் கொள்கிறேன் எனக் கூறி வாழை இலைகளை வாங்கிக் கொண்டது.

''வாடா மல்லி வண்ணம் முதலில்
கருநீலமோ அடுத்த வண்ணம்
வானின் நீலம் மூன்றாவதாய்
தானே இலை தந்த வாழையின் நிறம்
தகவாய் நான்கென அமைத்தல் நலம்
வளர்ந்த அரளி ஐந்தாவது
வண்ணப் பட்டம் அழியாதது''
என்று தனக்குள்ளாக பாடிக் கொண்டே

சென்ற மாரியின் கண்களில் ஓரத்தில் பூத்துக் குலுங்கிய கனகாம்பர மலர்கள் தென்பட்டன. காவி நிறத்தில் மலர்கள் கான மயிலைக் கவர்ந்தன. தன் பட்டத்தில் அடுத்ததாக இந்த மலர்களின் வண்ணத்தைச் சேர்க்க வேண்டும் என அது முடிவு செய்தது.

''காட்டில் மலர்ந்த கனகாம்பரமே
கான மயிலென் குரலைக் கேளேன்.
நாட்டமுடன் நான் கேட்ட
நல்ல பட்டம் செய்வதற்கு
உந்தன் மலரின் வண்ணம் கொஞ்சம்
அள்ளித் தந்து விட்டாயானால்
அடுத்த நிறமாய் அதனைச் சேர்த்து
அழகிய பட்டம் செய்திடுவேன்''

என்று கனகாம்பரச் செடியிடம் கேட்டதும், அச் செடியும் தன்னிடமுள்ள மலர்களை அள்ளிக் கொடுத்து மயில் மாரியை அனுப்பி வைத்தது.

ஆறு வண்ணங்கள் கிடைத்த திருப்தியில் கரடி காவேரியின் இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மயில் ''ஆற்றங்கரையில் அழகாகப் பூத்துக் குலுங்கிய செம்பருத்திச் செடியைக் கண்டது. சிவந்த அதன் மலர்களின் செந்நிறத்தையும் தன் பட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தனது ஆசையைக் கூறியது. மிகுந்த சந்தோஷமடைந்த செம்பருத்திச் செடியும் தன் மலர்களை அதனிடம் கொடுத்து அனுப்பியது.

ஏழு வண்ண மலர்களைச் சுமந்து கொண்டு தையல் வேலை செய்யும் கரடி காவேரியிடம் சென்ற மயில் மாரி அங்கு ஏற்கனவே வெள்ளை நிறத்தில் தயாராக இருந்த பட்டத்தின் மீது கரடி காவேரியின் உதவியோடு மலர்களின் வண்ணங்களை அதில் பூசியது.

அதன் பிறகு பட்டத்திலிருந்து நீண்ட நூலை இணைத்து தன் கைகளில் வைத்துக் கொண்டு மயில் மாரி வண்ணப் பட்டத்தை வானில் பறக்க விட்டது.


பட்டத்தை, கையில் பிடித்தபடி வனம் முழுவதும் வலம் வந்த மயில் மாரியைச் சுற்றி மற்ற விலங்குகள் கூட்டமாக கூடி அந்தப் பட்டத்தை வேடிக்கை பார்த்தபடி அதிசயித்துக் கொண்டிருந்தன.

இவையெல்லாம் கண்ட மயில் மாரிக்கு மீண்டும் தலைக்கனம் உருவானது. தன் கையில் இருந்த நூலை வேகமாக விடுவித்தது. வண்ணப்பட்டமும் வானத்தைத் தொடும் அளவு உயரே பறந்தது.

வானில் மிதந்து வந்த வெண்மேகக் கூட்டம் ஒன்று தன்னைத் தொடுவது போல சென்ற பட்டத்தைக் கண்டது. உடனே தன் கூட்டத்தாரை அழைத்தது. கூட்டமாகக் கூடிய மேகங்கள் வண்ணப் பட்டத்தைச் சூழ்ந்து நின்று கொண்டு அதனுடன் இணைந்திருந்த நூலை அறுத்து விட்டன.

அந்தோ பரிதாபம்! ஆசையாக மயில் மாரி செய்த பட்டம் மேகக் கூட்டத்தின் பிடியில் சிக்கிக் கொள்ள, வெறும் நூல் மட்டும் மயில் கைகளில் விழுந்தது.

மேகங்கள் கூடி தன் பட்டத்தைத் திருடிக் கொண்டதைக் கண்ட மயில் தன் தோகையை விரித்து, ஆட்டம் ஆடி மேகங்களைக் கவர்ந்து, தன் பட்டத்தைத் தருமாறு கேட்டது. கூட்டமாக வந்த மேகங்களோ மழையாகப் பொழிந்து மயிலின் பட்டத்தை வானில் பறக்க விட்டு, பின் எடுத்துச் சென்று விட்டன.



பாவம் மயில் மாரி இப்போதும்கூட தன் பட்டத்தைக் காண வேண்டும் என்ற ஆசை கொண்டவுடன் தோகை விரித்து ஆடுகிறது. மயிலின் ஆட்டத்தைக் கண்ட மேகங்கள், மழையாகப் பொழிந்தபின் வான வில்லான மயிலின் பட்டத்தை வானில் பறக்க விடுகின்றன.

# எடைக்கு எடை

மாவீரர் நெப்போலியனுக்குத் தாம் குள்ளமானவர் என்கிற மனக்குறை இருந்தது. கம்பீரமான உருவம் கொண்ட தனது படைவீரர்களுக்கு மத்தியில் குள்ளமான



வராக வந்து நின்றால், தன் மீது படைவீரர்களுக்கு இருக்கிற இமேஜ் அது பாதிக்கும் என்று கருதினார். இதனால் எப்போதும் குதிரையின்மீது அமர்ந்தபடிதான் படை வீரர்கள் முன் தோன்றுவார். 'நெப்போலியன் குதிரை மீதிருந்தபடியே தூங்குவாராம்' என்று சொல்லப்படுவதுகூட இதனால்தான். படை வீரர்களுக்கு ஆணை விடும்போது கூட, அருகில் இருக்கும் ஏதேனும் ஒரு குன்றின் மீது ஏறி நின்றுகொண்டுதான் ஆணையிடுவார். அதேபோல் குதிரையில் அமர்ந்தபடியே கூடாரத்திற்குள் நுழைந்து, உள்ளே சென்றதும்தான் குதிரையை விட்டு இறங்குவார்.

ஸ்பெயின் நாட்டு அரசி, மேரியும் வெளியிட்ட ஆணை ஒன்றில் ஸ்பெயின் நாட்டில் பதினோரு ஆண்டுகளுக்கு எல்லா நாடகக் கொட்டகைகளும் இழுத்து மூடப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ஏன் தெரியுமா? அரசியின் மகனை இளவரசனுக்கு அப்போது வயது நான்காக இருந்ததால் அவனால் நாடகத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்பதால்தான் இந்த ஆணை!

நாம் நிலங்களை, பல வீடுகளை வாங்குவது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். சில கிராமங்களை அரசர்கள் தானமாகக் கூட கொடுத்து, பெற்றுக் கொண்டது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், ஒரு மாநிலத்தையே ஒரு நாடு இன்னொரு நாட்டிடம் இருந்து விலை கொடுத்து வாங்கியிருக்கிறது என்கிறது சரித்திரம். அமெரிக்கா, ரஷ்யாவிடம் இருந்து அலாஸ்கா என்ற மாநிலத்தை 1862ல் 70 லட்சம் டாலர்களுக்கு விலை கொடுத்து வாங்கியது!

அலெக்சாண்டர் கி.மு. 400இல் இந்தியா மீது படை எடுத்தார். இந்திய மன்னர்களை வென்று இந்தியாவிலிருந்து ஏராளமான சொத்துகளைக் கிரேக்க நாட்டுக்குக் கொண்டு சென்றார். இந்திய வைத்திய நூல்களையும், இந்திய வைத்திய நிபுணர் ஒருவரையும் தன்னோடு அழைத்துச் சென்றார். இந்திய வைத்தியர் பாம்புக்



கடிக்குச் சிறந்த மருத்துவம் செய்து குணப்படுத்திய அதிசயத்தை அலெக்சாண்டர் நேரில் கண்டபிறகு, கிரேக்க மக்களுக்கு ஓர் அறிவிப்புக் கொடுத்தார். கிரேக்க மக்களுக்குப் பாம்புக் கடிக்கு வைத்தியம் செய்யத் தெரியாது. இதனால் கிரேக்கர்கள் பலர் பாம்புக் கடியால் இறந்து போனார்கள். நாட்டில் யாரையாவது பாம்பு கடித்துவிட்

# தங்கம்!



வரலாற்று விந்தைகள்



டால் அவர்களை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள். இங்குள்ள இந்திய வைத்திய நிபுணர் குணப்படுத்துவார் என்று முரசு கொட்டி அறிவிப்புக் கொடுத்தார் அலெக்சாண்டர்.


கி.மு. 3000 ஆம் ஆண்டிலேயே எகிப்தியர்கள் நீளத்தை அளக்க கையால் முழம் போடப் பழகிவிட்டார்கள். முழங்கை தொடங்கி விரல்கள் வரை இந்த அளவு சரியானதுதானா என்பதை மக்கள் உறுதி செய்து கொள்ள அரண்மனையில் கிரனைட் கல்லில் செய்யப்பட்ட பொதுவான 'முழங்கை அளவு' ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

எகிப்து நாட்டில் 1840 ஆம் ஆண்டு வாக்கில் இராணுவ வாழ்க்கை மிக மிக துன்பம் நிறைந்ததாக இருந்தது. அதனால், இராணுவத்தில் சேருவதற்கு அஞ்சியவர்கள், தங்களுடைய ஒரு கண்ணைக் குருடாக்கிக் கொண்டனர். அவ்வாறு குருடாக்கிக் கொள்வதால், தாங்கள் இராணுவத்தில் சேர்வதற்குத் தகுதியற்றவர்களாகி விடுவோம். இராணுவத்தில் சேராது தப்பி விடலாம் என்று கருதினார்கள்.

ஆனால், அவர்கள் எண்ணத்தில் மண் விழுந்தது. எகிப்து மன்னன் முகமது அலி, ஒரு கண் குருடானவர்களை மட்டுமே கொண்ட ஒரு படையை அமைத்துக் கொண்டான்.



அதிக அளவு ஊதியம் பெற்ற ஆசிரியர் யார் தெரியுமா? அக்பர் சக்கரவர்த்தியின் 3 மகன்களுக்கும் பாடம் சொல்லித் தந்தவரான பாரசீகக் கவிஞர் அபுல் ஃபைசல். இவர் 15 ஆண்டுகள் பாடம் சொல்லித் தந்ததற்காக மூன்று மாணவர்களின் எடைக்கு எடை தங்கத்தைச் சன்மானமாகப் பெற்றார்.



மொகலாயர்களின் கடைசி மன்னர் பகதூர்ஷா 200 புறாக்களுக்கு விசேஷ பயிற்சி அளித்து வளர்த்து வந்தார். இவர் வெயில் நேரத்தில் வெளியில் செல்ல நேர்ந்தால் இப்புறாக்கள் வானில் ஒன்று கூடிப் பறந்து மன்னர் மீது தங்களது நிழல் விழுமாறு பறக்கும்!

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்.

# ஓட்டைக்குள் சென்ற குதிரை!





# சுட்டெரிக்கும்



▲ முதல் பரிசு : கே.சரவணக்குமார், பத்தாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, காரமடை.

இரண்டாம் பரிசு : அ. ப்ரீத்திகா, எட்டாம் வகுப்பு, அல்வேர்னியா மெட்ரிகுலேஷன் பள்ளி, இராமநாதபுரம், கோவை ▶



# வெயில்!



வண்ணத் தூரிகை

ஜூன் இதழில் 'வெயில்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



▲ மூன்றாம் பரிசு : கே. கார்த்தி, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி



▲ ஆறுதல் பரிசு : கே. மணிகண்டன், உப்பிலியாபுரம், திருச்சி



◀ ஆறுதல் பரிசு : எஸ். ரவிக்குமார், செஞ்சி, விழுப்புரம் மாவட்டம்

# அருந்ததி ராய்க்கு அமைதி விருது!

செய்தி நேரம்

## விருது!


இந்தியாவைச் சேர்ந்த பிரபல ஆங்கில எழுத்தாளரும், மனித உரிமைகளுக்காகப் போராடி வருபவருமான அருந்ததி ராய் 2004 ஆம் ஆண்டுக்கான சிட்னி அமைதி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சமூக இயக்கங்கள், வன்முறை எதிர்ப்பு நடவடிக்கைகளில் இவரது பங்களிப்பைப் பாராட்டி இந்த விருது அருந்ததி ராய்க்கு வழங்கப்படுகிறது. சிட்னி அமைதி விருது என்பது ஆஸ்திரேலியாவில் வழங்கப்படும் சர்வதேச அமைதி விருது ஆகும்.



• அருந்ததி ராய்

## புத்தர் விரல்

புத்தரின் பிறந்த நாளை முன்னிட்டு சீனாவில் இருந்து குண்டு துளைக்காத கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட புத்தரின் விரல் ஹாங்காங் கொண்டு வரப்பட்டது. பொது மக்களின் பார்வைக்காக பத்து நாட்கள் வைக்கப்பட்ட புத்தரின் விரலை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து சென்றுள்ளனர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு ஐந்தாம் நூற்றாண்டில் எரியூட்டப்பட்ட ஒரு புத்த துறவியின் விரல் எலும்பு. இந்திய புத்த துறவிகளால் பாதுகாக்கப்பட்டு வந்ததாகவும், இந்த விரல் எலும்பு பின்னர் சீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் நம்பப்படுகிறது. சீனாவில் ஜியான் அருகில் ஒரு கோயிலில் இந்த விரல் புதைக்கப்பட்டு இருந்தது கடந்த 1987ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.



• ஒலிம்பிக் ஜோதி

## 32 லட்சம் சம்பளம்!

நமது எம்.பி.களுக்கு ஆண்டு சம்பளமும் சலுகையும் சேர்த்தால் 32 லட்சம் ரூபாய் கிடைக்கிறது. எம்.பி.களின் மாதச் சம்பளம் ரூ.12,000 வீதம் ஆண்டுக்கு 1,44,000 ரூபாய். இந்தச் சம்பளம் தவிர மாதம் தோறும் தொகுதிப்படி ரூ.10,000, அலுவலகப் பராமரிப்பு ரூ.14,000, பயணப்படி ரூ.16,000, பார்லிமெண்டில் கையெழுத்துப் போட்டால் தினசரி ரூ.500 வீதம் ஆண்டுக்கு ரூ.1,35,000. இது தவிர நாடு முழுவதும் ரயில்களில் முதல் வகுப்பில் இலவச பயணம். ஆண்டுக்கு 40 முறை இலவச விமானப் பயணம். இந்தப் பயணங்களின்போது உதவியாளர் ஒருவரையும் அழைத்து செல்லலாம். ஆண்டுக்கு 50 ஆயிரம் யூனிட்வரை இலவச மின்சாரம், தண்ணீர் சலுகையில் ரூ.2,00,000. 3 இலவச டெலிபோன் இணைப்பு ரூ.2,00,000. இலவச பங்களா என சம்பளமும் சலுகைகளும் 32 லட்சம் ரூபாயைத் தாண்டுகிறது.

## ஒலிம்பிக் தீபம்

ஆகஸ்ட் 13ந் தேதி துவங்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஒலிம்பிக் தீபம் ஏதென்ஸ் நகரிலிருந்து சிட்னிக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டது. அங்கிருந்து 27 நாடுகள், 78 ஆயிரம் கி.மீ. தூரம் பவனி வந்து கடைசியாக ஏதென்ஸ் வந்து சேரும். 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தத் தீபத்தை ஏந்திச் செல்லும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

# எது ஸ்வீட்?


ஜோக்ஸ் தர்பார்

"படிக்கும்போது தொந்தரவு பண்ணாதேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் உனக்கு?"

"நாலு தடவை அண்ணா..."

- அனுராதா ராஜப்பா





"உனக்குத் தெரியுமா... கடலில் போன பஸ்?"

"கொலம்பஸ்!"

- கு. அருணாசலம், தென்காசி



"மல்கோவா மாம்பழம், பங்கனப்பள்ளி மாம்பழம் ரெண்டுலே எது ஸ்வீட்?"

"ரெண்டுலே ஸ்வீட் இல்லை... ஃப்ரூட்!"


- நா. முகமது இக்பால், தஞ்சாவூர்

"நான் ஒரு பல் டாக்டர்னு எப்படி கரெக்டா கண்டு பிடிச்சீங்க?"

"சில்லறை பிரச்னைக்கெல்லாம் கோபப்படுறீங்களே... அதை வெச்சுத்தான்!"

- குட்டி பிரசன்னா, கரூர்






# மழை நீர் சேமிப்போம்





# குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்



## இடமிருந்து வலம்

1. கவிச்சக்கரவர்த்தி ______ (4)
3. சிறிய பள்ளம் (2)
4. பூக்களில் ஒன்று. ஓர் எழுத்தை நீக்கினால் குரங்காகி விடும். (4)
5. கல்வி, பேச்சு போன்றவை ______ வளர்த் தலங்கள் (2)
7. இதற்கு முந்து படைக்குப் பிந்து என்று ஒரு பழமொழி உண்டு (3)
8. குடை பல் போன்றவற்றை ______த்தால்தான் பயன் (2)
11. ______ தொழுவது சாலவும் நன்று (4)
12. ஷில்லாங்கைத் தலைநகராகக் கொண்ட இந்திய மாநிலம் ______ (4)



## வலமிருந்து இடம்

2. எலெக்ட்ரானிக்ஸ் பொருட்களுக்குப் புகழ் பெற்ற நாடு ______ (4)
6. அமெரிக்காவின் கரன்சி ______ (3)
9. காய்களில் ஒன்று. எல்லாவித சமையலுக்கும் பயன்படும்(4)
10. பூனை குடும்பத்தைச் சேர்ந்தது. இந்தியாவின் தேசிய விலங்கு (2)

## மேலிருந்து கீழ்


1. பறவைகளின் அரசன் ______ (3)
2. முப்படைகளின் தலைவர் (5)
9. ஒரு வகை வாத்தியம். மண்ணால் செய்யப்பட்டிருக்கும் (3)

## கீழிருந்து மேல்

4. பொருட்கள் (3)
5. சிறுவன் என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)
6. மைசூர்பாகு ______களாகப் போடப்பட்டு அடுக்கி வைக்கப்படுகிறது (3)
11. மாதா, பிதாவுக்கு அடுத்து வருபவர் (5)
12. கட்டடங்களை மேற்பார்வை செய்பவர் (4)
13. இலக்கணங்களில் ஒன்று (3)

- ஆர். பெருமாள், பன்னிரண்டாம் வகுப்பு, நீலாம்பாள் சுப்ரமணியம் மே.நி. பள்ளி, சேலம்

விடை 62ஆம் பக்கம்





# வேழம் செய்த

அரண்மனைக்குள் மெல்லிய சாரல் அடித்தது. அழகிய சுவர்கள் நீரால் கரைய திடுக்கிட்டார் ராணி. 'இது கார் காலம் இல்லையே, எப்படி இந்தத் திடீர் மழை?' அரண்மனை அழிந்து விடுமோ என்ற அச்சம் எழ வேலைக்காரர்களை அனுப்பி வானிலை சரி பார்த்து வரச் சொன்னார்.

அரண்மனை வாயிலை அடைந்த சேவகர்கள் அதிர்ந்தனர். சற்று தூரத்தே 'கரி'ய மலையாய் நின்று கொண்டு தன் துதிக்கையில் உள்ள நீரை அரண்மனைக் குள் பீய்ச்சிக் கொண்டிருந்தான் குறும்பன் 'வேழம்'.

பசுமை சூழ்ந்த அந்த வனத்தில் அசைந் தோடும் ஆற்றின் கரையில் கம்பீரமாய் எழுந்து நின்று கொண்டிருந்தது அந்தக் கரையான் புற்று. அங்கே குறும்பு மிகுந்த யானைக் குட்டியும் இருந்தது. அந்தச் சுட்டி யானை செய்யும் குறும்புகள் சில சமயம் அள வுக்கு மீறி தொந்தரவாய் அமைந்துவிடும். இன்று வேழத்தின் குறும்பில் சிக்கிக் கொண்டதுதான் இந்தக் கரையான் புற்று.

''யானை அண்ணா... யானை அண்ணா.... எங்கள் அரண்மனை அழிகிறதே கவனிக்கவில்லையா?'' என கேட்டது வேலைக்காரக் கரையான்.

''என்ன அழகாய் வண்ணமயமாய் நீர் வழிந்து ஓடு கிறது பார்த் தாயா! வண்ண ஆறு.... ஹா... ஹா... அழகான காட்சி!'' என வர்ணித்தப் படியே நீரைப் புற்றின் மேல் அடித்துக் கொண் டிருந்தது யானைக்குட்டி.

யானைக்குட்டி சொன்னால் கேட்காது எனப் புரிந்து கொண்ட கரையான்கள் தங் களின் ராணியாரிடம் சென்று விஷயத்தை விளக்கின. ராணியார் தன் படை பரிவாரங் களுடன் புற்றுக்கு வெளியே வந்தார்.


''வணக்கம் வேழமே, நலமா?''-ராணியார்.

''என் இன்பத்தைப் பார்த்தால் தெரிய வில்லையா?'' என்றது வேழம்.

''வேழமே, எங்கள் பலரின் கடும் உழைப்பை நீர் ஒரு நிமிடத்தில் வீணாக்கு கிறீரே, இது சரியா? இந்தக் கோட்டையைக் கட்ட நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப் போம் என்பதை ஏன் மறந்து விட்டீர்?'' என பண்பாய் கேட்டார் ராணியார்.

''உங்களைப் பற்றிய கவலை எனக் கெதற்கு?''

''அழித்தல் சுலபம். ஒன்றை உரு வாக்குதல் எவ்வளவு கடினம் தெரி யுமா? உங்களால் மீண்டும் இந்தக் கோட்டையைக் கட்டித் தர முடி யுமா?... நினைத்துப் பாருங்கள்'' என்றார் ராணியார். ''உங்களால் என்ன செய்ய முடியுமோ




# குறும்பு!

இராம் ஜீஸஸ்

"செய்யுங்கள்" என்று கூறிய யானைக்குட்டி ஆற்று நீரை மீண்டும் உறிஞ்சியது.

யானையிடம் பேசி ஒன்றும் பயனில்லை என்று புரிந்து கொண்ட கரையான்கள் புற்றை விட்டு வெளியேறிச் செல்ல ஆரம்பித்தன. "ஹா-ஹா கோழைகள் ஓடுகின்றன" என எக்காளமிட்டுச் சிரித்தது யானைக்குட்டி.

பிறர் கஷ்டம் என்னவென்று யானைக்குப் புரிய வைக்க வேண்டுமென முடிவெடுத்த ராணி கரையான் தனக்கு மிகவும் நம்பகமான மதியூகி கரையானை அழைத்து தனது யோசனையைச் சொன்னது.



வேழம் எப்போதும் இளைப்பாறும் இடம் அதற்குத் தெரியும். மெல்ல மதியூகி கரையான் அந்த மரத்தினை நோக்கிச் சென்றது. மரத்தின் மீது ஏறி கிளையின் ஓரத்தில் வந்து நின்று கொண்டது.

மெல்ல விளையாடி விட்டு வந்த யானைக்குட்டி எப்போதும் போல் மரத்தின் பக்கவாட்டில் நின்று கொண்டு கண்மூடி இளைப்பாறியது. காதுகள் மட்டும் அசைந்து கொண்டே இருந்தன. மெல்ல யானை காதின் மூடி மேல் இறங்கியது மதியூகி. கொஞ்சம் தவறினாலும் யானையின் காதில் அடிபட்டு இறக்க நேரிடும். வேழம் அதிகமாகவே அதன் காதுக்குள் சென்று குடைய ஆரம்பித்தது.

அலறியது யானைக்குட்டி. மண்ணில் விழுந்து புரண்டது. மதியூகி குடைவதை நிறுத்தியது. நிம்மதி பெருமூச்சு விட்டது வேழம். மீண்டும் மதியூகி காது குடைய அது ஆரம்பித்தது. யானைக் குட்டிக்கு விஷயம் விளங்கியவுடன் நேராக ராணியாரிடம் ஓடி மன்னிப்புக் கேட்டது.

"உருவத்தைப் பார்த்து யாரையும் குறைவாய் எண்ணி விடாதே. அவரவர் பலம் அவரவருக்கு. இனிமேல் யாரையும் துன்புறுத்தாதே" என்றார் ராணியார்.

காதைவிட்டு வெளியே வந்த மதியூகி வேழத்திடம் மன்னிப்புக் கேட்டது. "உன்னைத் துன்புறுத்த வேண்டும் என்பது எனது நோக்கமல்ல. நீ மற்றவரின் துன்பத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தான் அப்படி செய்தேன். என்னை மன்னித்து விடு" என்றது.

"என்னுடைய புத்தியைத் தெளிய வைத்த உங்களுக்கு நன்றி" என விடைபெற்ற வேழம் அன்றிலிருந்து தொல்லை தரும் குறும்புகளைச் செய்வதில்லை.

# மொட்டை மாடியில்

## நினைவில் நின்றவை...



### சேர்

நாங்கள் வீட்டில் புதிதாக ஒரு கம்ப்யூட்டர் வாங்கியிருக்கிறோம். என் தங்கை மினு எப்போதும் அதில் 'கேம்ஸ்' விளையாடிக் கொண்டே இருப்பாள். எங்கள் அப்பாவோ அவள் கம்ப்யூட்டர் பயன்படுத்துவதை மிகவும் பெருமையாகக் கருதினார்.

ஒரு நாள் ஊரிலிருந்து எங்கள் மாமா வந்திருந்தார். அவர் என் தங்கையிடம், ''மினு! உனக்கு கம்ப்யூட்டரை ஆபரேட் பண்ணத் தெரியுமா?'' என்று கேட்டார். உடனே எங்கள் அப்பா முந்திக் கொண்டு, ''தெரியுமாவா? அவள் 24 மணி நேரமும் கம்ப்யூட்டரிலேயே உட்கார்ந்திருப்பா!'' என்று பெருமையாகக் கூறினார். உடனே எங்கள் மாமா, ''ஏன்? உங்க வீட்டுல நல்ல சேர் எதுவும் இல்லையா?'' என்று 'கடி'க்க, அப்பாவின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

- எம். வினோத்,
சங்கரன்கோவில்

### ஐஸ்...

என் பாட்டி வீட்டிற்குச் சென்றிருந்தோம். வீடு நிறைய குழந்தைகளாக அங்கே இங்கேயென்று ஓடி விளையாடுவோம். ஐஸ் வியாபாரி ஒருவர் எங்களைப் பார்த்தவுடன் பீப், பீப் என்று அதிகமாக ஹாரன் அடிப்பார். என் தங்கை, தம்பி, அனைவரும் ஐஸ் கேட்டு அடம்பிடிப்பர். ஐஸ் சாப்பிட்டு சளி பிடித்து அவதிப்படுவதைத் தடுக்க என் அம்மா ஒரு ஐடியா செய்தார். பிள்ளைகள் ஐஸ் கேட்கு முன் அம்மா முந்திக் கொண்டு ''அந்த ஐஸ்காரர் மட்டும் வரட்டும், இந்த மரத்தில் கட்டி வைக்கப் போகிறேன். பிள்ளைகள் பாவம் சளி பிடித்து கஷ்டப்படுகிறார்கள்'' என்றார். அப்பொழுது என் தங்கை ஐஸ் வண்டிக்காரர் முன் ஓடிச்சென்று ''ஐஸ்காரரே, நீங்கள் வேறு வழியாக ஓடிப் போயிடுங்க. எங்களுக்கு ஐஸ் வேண்டாம்'' என்று கத்த, வாண்டூஸ் அனைவரும் கோரஸ் பாட, ஐஸ்காரர் புரியாமல் நகர்ந்து விட்டார். என் அம்மா முகத்தைப் பார்க்க வேண்டுமே!

- டேனியல் லியோ பிரபு,
மதுரை

### பேய்!

ஒரு நாள் இரவு, என் அம்மா, மாடியில் திறந்திருந்த குழாயை மூடி வருமாறு கூறினார். மொட்டை மாடிக்குச் சென்ற நான், ''பேய்! பேய்! பக்கத்து வீட்டு மொட்டை மாடியில் பேய்!'' என அலறியடித்துக் கொண்டு கீழே வந்தேன். ''பேயாவது பூதமாவது, அதெல்லாம் ஒண்ணும் இல்லை'' என்று என் பெற்றோர் கூறினர். ''இல்லை, இல்லை, பேய் தான்; தலையில்லாத பேய், வெள்ளையாக இருந்தது. அதற்கு இரண்டு கைகள் கூட இருந்தது. அப்படியும் இப்படியும் வேறு அசைகிறது அப்பா'' என்றேன் நான் பதற்றத்துடன். ''சரி, சௌமித்ரி, பேயைக் காண்பி வா. நான் அடித்துத் துரத்துறேன்'' என்றார் அப்பா.



# பேய்!

"எங்கே? எங்கே?" என்று கேட்டபடி என் தங்கை, சௌமியும் ஓடிவந்து வந்தாள். "அங்கே பாருங்கள்! திவ்யா வீட்டு தோட்ட மாடியில்" என்று கத்தினேன். நான் காட்டிய திசையை நோக்கி அப்பா பார்க்கை அடுத்தும் கடகடவென்று சிரித்தாள் சௌமி. அங்கே பார்த்தால், துவைத்து உலர்த்தியிருந்த திவ்யாவின் வெள்ளை நைட்டி கொடியில் ஆடிக் கொண்டு இருந்தது! நானோ வெட்கத்தால் சிரிக்கவும் முடியாமல் அழவும் முடியாமல் பரிதாபமாக நின்றேன்.

- உ. சௌமித்ரி,
கும்பகோணம்



## ஏமாற்றலாமா?

எனக்கு ஐந்து வயதாக இருக்கும் பொழுது என் வீட்டிற்கு அருகே உள்ள தெருக்களில் ஒரு தாத்தா குல்பி ஐஸ் விற்றுக் கொண்டு வருவார். மிகவும் நல்ல ஐஸ். என்னை மிகவும் பிடிக்கும் அவருக்கு. எங்கள் தெருவில் உள்ள குழந்தைகளெல்லாம் அந்தத் தாத்தாவிடம் ஐஸ் வாங்கிச் சாப்பிடுவார்கள். நான் வாரத்திற்கு ஒரு முறை அந்த ஐஸ் வாங்குவேன். அது 5 ரூபாய்தான். முதல் 3 வாரங்கள் சரியாகப் பணத்தைக் கொடுத்து வந்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை அந்தத் தாத்தாவிடம் ஐஸ் வாங்கிவிட்டு 5 ரூபாய்க்குப் பதிலாக 3 ரூபாய் மட்டுமே கொடுத்தேன். அவரும் சரியாக எண்ணாமல் காசை பையில் போட்டுக் கொண்டு சென்று விட்டார்.



இதை என் அம்மாவிடம் வேடிக்கையாகச் சொன்ன போது, அம்மா என்னைக் கண்டித்தாள். ஒருவரை ஏமாற்றுவது மிக மிகத் தவறு என்பதை எனக்கு உணர்த்தினாள். நானும் புரிந்து கொண்டு முதல் வேலையாக அந்தத் தாத்தா வீட்டிற்குச் சென்று காசைக் கொடுத்துவிட்டு வந்தேன். இப்பொழுது கூட ஐஸ் கிரீம் வாங்கினால் ஒரு முறைக்கு இருமுறை எண்ணிப் பார்த்து தான் காசைக் கொடுக்கிறேன்.

- உ. கீர்த்தனா,
கும்பகோணம்

## பரிசு!

என் இரு தங்கைகளும் மாறுவேடப் போட்டியில் சேர்ந்திருந்தனர். மேடை ஏறியதும் இருவரும் சொல்லி வைத்தாற் போல் ஒரே அழுகை. வீட்டிற்கு வந்ததும் நான் அவர்களிடம், "அழுகைக்கும் பரிசு கொடுத்தால், நீங்கள்தான் முதல் பரிசு வாங்குவீர்கள்" என்று சொன்னேன். இரு நாட்களுக்குப் பிறகு என் தங்கைகள் இருவரும், "இன்று எங்க ஸ்கூலில், அழுததற்குப் பரிசுக் கொடுத்தாங்க, எங்க மிஸ்ஸைப் பார்" என்றபடி பரிசுகளைக் கொண்டுவர, எங்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் ஆச்சரியம். போட்டியில் கலந்த அனைவருக்கும் உற்சாகம் ஊட்டும் வகையில் ஆறுதல் பரிசு கொடுத்திருப்பதே பள்ளி நிர்வாகத்திற்கு ஒரு சபாஷ் போடலாம்!

- எஸ். கிரேசி சகாயம்,
ஈரோடு



# பார்த்தால் ஐந்து கால்! எண்ணினால் நான்கு கால்!

## விடுகதைப் பக்கம்

I. 1. பறிக்க பறிக்க பெரிதாகிறது - அது என்ன?

2. காதலன் வந்தால் திறக்காதவளும் திறப்பாள் - அவள் யார்?

3. சின்னஞ்சிறு கிட்டுக்குருவி இறந்து இறந்து வேலி அடைக்குது - அது என்ன?

4. பிறந்த பின் வளர்ந்தது வளர்ந்த பின் மறைந்தது - அது என்ன?

5. கால் இல்லாத பந்தல், காணும் இடம் எல்லாம் விரிந்து நிற்கிறது - அது என்ன?

- நா. ராஜேந்திரன், அறந்தாங்கி

II. 1. அம்மாள் தோட்டத்தில், அழகு மான் தோட்டத்தில் மஞ்சக் குருவி ஊஞ்சல் ஆடுது - அது என்ன?

2. ஆயிரங்கால் கிணற்றிலே மயிரைக் கட்டி கூத்தாடுது - அது என்ன?

3. கிணற்றிலே வெள்ளைக் கிண்ணம் மிதக்குது - அது என்ன?

4. அரைக்கீரை கிழமுத்தி அறுகளிற்று. மணமில்லை - அது என்ன?

- ஆர்.எஸ். உலகம்மை, காரைக்குடி



III. 1. பார்த்தால் ஐந்து கால் எண்ணினால் நான்கு கால் - அது என்ன?

2. எத்தனை தடவை திறந்து திறந்து மூடினாலும் சத்தமே வராத கதவு - அது என்ன?

3. மின்னல் வேகத்தில் மின்னியதைப் பிடித்து வைப்பாள் - அவள் யார்?

4. உணரத் தெரிந்தவரை கண்ணால் காண முடியாது - அவன் யார்?

- கி. கலைவாணன், திருவண்ணாமலை

IV. 1. பறக்கும் ஆனால் பறவையல்ல, சக்கரம் உண்டு; ஆனால் வண்டியும் அல்ல - அது என்ன?

2. கையில் அடங்கும் பிள்ளை, கதை நூறு சொல்லும் பிள்ளை - அது என்ன?

3. மறைக்கவும் முடியாது, பிடிக்கவும் முடியாது - அது என்ன?

- கு. சித்ரா, மூன்றாம் வகுப்பு, விவேகானந்தா பாலவித்தி மெட்ரிகுலேசன் பள்ளி, சேலம்

V. 1. ஓர் ஆண்டு உயிர் வாழ்வாள், ஒவ்வொரு நாளாகக் காட்டி தருவாள் - அவள் யார்?

2. முற்றுக்கள் மனிதனுக்கு எட்டுக்கை - அவன் யார்?

3. சிரிக்காமல் கிடப்பான் கட்டுக் குள்ளே, சிரித்தபின் வருவான் வீட்டுக் குள்ளே - அவன் யார்?

- ராகவ், சென்னை

விடைகள் :

I. 1. பள்ளம் 2. கொட்டாவி 3. எறும்புச் சாரி 4. பல் 5. வானம்

II. 1. எலுமிச்சம்பழம் 2. மத்து 3. வெண்ணெய் 4. [illegible]

III. 1. யானை 2. கண் இமை 3. புகைப்படக் கருவி 4. காற்று


IV. 1. [illegible] 2. புத்தகம் 3. நிழல்

V. 1. காலண்டர் 2. குடை 3. பருத்தி


# சூரியனா, சந்திரனா?



## படத்தை நிறைவு செய்யுங்கள்!



## வண்ணம் தீட்டுங்கள்!



# 1000/- ரூபாய் பரிசு!



இந்த மாதப் போட்டி




உங்களுக்கு மிகவும் பிடிக்கும் இந்தப் போட்டியில் கலந்து கொள்வது சுலபம்.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

- கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குச் சரியான பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும்.
- பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
- முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

மொத்தப் பரிசு ரூ.1000/- சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

**கடைசித் தேதி 20.07.2004**





6. இது எந்த நாட்டுக் கொடி?

## கியூபா

1. தலைநகரம் __________
2. மொழி __________
3. கரன்சி __________
4. முக்கிய விளைபொருள்கள் __________
5. கியூபா தீவு அமைந்திருக்கும் கடல் __________

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 97.



ஹலோ சுகமா?

# ரத்தம் எங்கு உற்பத்தியாகிறது?

• கு. கணேசன், உளுந்தூர்பேட்டை.


? நம் உடலில் ரத்தம் எங்கு உற்பத்தியாகிறது?

! குழந்தை தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும்போது அதன் மண்ணீரல், கல்லீரல் ஆகிய உறுப்புகளில் ரத்தம் உற்பத்தியாகிறது. சிசுவிற்கு 5 மாதங்கள் ஆனபின்பு எலும்புகளின் உள்ளே உள்ள 'எலும்பு மஜ்ஜை' என்னும் பகுதியில் ரத்தம் உற்பத்தியாகிறது. குறிப்பாக மார்பு எலும்பு, கை எலும்பு, கால் எலும்பு, இடுப்பெலும்பு, விலா எலும்பு போன்றவற்றின் மஜ்ஜையில் ரத்தம் உற்பத்தியாகும். இது தவிர நிணநீர் அணுக்களிலும் ரத்தம் உற்பத்தியாகிறது.

• சே. ஞானவடிவேல், பெங்களூர்.

? ஸ்டெதாஸ்கோப்பைக் கண்டுபிடித்தவர் யார்?

! 1816ம் ஆண்டில் ஃபிரான்ஸ் நாட்டு மருத்துவர் ரெனே லேனக் என்பவர் ஸ்டெதாஸ்கோப்பைக் கண்டுபிடித்தார். அவர் ஸ்டெதாஸ்கோப்பைக் கண்டுபிடித்தது மிகவும் சுவாரசியமானது. அந்தக் காலத்தில் இதயத் துடிப்பின் தன்மையை அறிய தனிப்பட்ட கருவி எதுவும் இல்லை. நேரடியாக நோயாளியின் மார்பில் டாக்டர்கள் தங்கள் காதை வைத்துக் கேட்பார்கள். இது சங்கடமாக இருந்தது. ஒரு நாள் காலை ரெனே லேனக் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தபோது இரண்டு சிறுவர்கள் ஒரு நீண்ட மரப் பலகையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஒரு சிறுவன் அந்த மரப் பலகையின் ஒரு முனையைத் தன் காதில் வைத்துக் கொண்டிருந்தான். மற்றொரு சிறுவன் அப்பலகையின் மறுமுனையை ஆணியால் கீறிக் கொண்டிருந்தான். ஆணியால் கீறும் சத்தம் பலகையின் மறுமுனையைக் காதில் வைத்துக் கொண்டிருக்கும் சிறுவனுக்குத் துல்லியமாகக் கேட்டது. இதைக் கவனித்த லேனக் ஒரு நீளமான காகிதத்தை உருளையாக சுருட்டி, அதன் ஒரு முனையை நோயாளியின் மார்பில் வைத்து மறுமுனையைத் தன் காதில் வைத்துக் கேட்டார். நோயாளியின் இதயத் துடிப்பு துல்லியமாகக் கேட்டது. இதை மாடலாக மனத்தில் வைத்துக் கொண்டு, ஒரு கருவியைத் தயாரித்தார். அதுதான் உலகின் முதல் ஸ்டெதாஸ்கோப். அதற்குப் பிறகு வந்த அறிவியலாளர்கள் நம் பயன்பாட்டிற்குத் தேவைப்படி அதன் அமைப்பை மாற்றிக் கொண்டனர்.



• வ. இளங்கோவேல், நாகர்கோவில்.

? தண்டுவடத்தின் பணி என்ன?

! முதுகெலும்புத் தொடரின் உள்ளே

தண்டுவடம் எனும் நரம்புப் பட்டை உள்ளது. இதை ஒரு தொலைபேசித் தொடர்புக்கு ஒப்பிடலாம். மூளையிலிருந்து கிளம்பும் நரம்புகள் தண்டுவடத்தின் வழியாக உடலின் பல்வேறு பகுதிகளுக்குச் செல்கின்றன. தோல் மற்றும் திசுக்களில் உண்டாகும் உணர்ச்சிகளை இந்த நரம்புகள் பெற்று மூளைக்கு அனுப்புகின்றன. மூளையிடும் கட்டளைகளை மீண்டும் அதே நரம்புகள் தோலுக்கும் திசுக்களுக்கும் கொண்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, சாப்பிடும்போது உணவு காரமாக உள்ளது என்று வைத்துக் கொள்வோம். இந்த உணர்ச்சியை மூளைக்குத் தண்டுவட நரம்பு அனுப்புகிறது. உடனே மூளை 'தண்ணீர் குடி' என்று தகவல் அனுப்புகிறது. தண்ணீர் குடித்தவுடன் காரம் குறைந்துவிடுகிறது. காரம் குறைந்து விட்ட செய்தி மீண்டும் தண்டுவட நரம்பு மூலம் மூளைக்குச் செல்கிறது. 'தண்ணீர் குடித்தது போதும் நிறுத்து' என்று மூளை கட்டளை இடுகிறது. இது ஒருபுறமிருக்க, சில அவசர நேரங்களில் உணர்ச்சிகளை மூளைக்கு அனுப்பாமல் தண்டுவடம் தானே மிக வேகமாகக் கட்டளைகளைத் தந்துவிடும். இதற்கு அனிச்சைச் செயல் என்று பெயர். உதாரணமாக, மிகச் சூடான பொருளைத் தொட்டால் உடனே விரலை எடுத்துக் கொள்கிறோமல்லவா? இந்தச் செய்தி மூளைக்குச் செல்வதற்குள் விரல் சுட்டுவிடும் என்பதால் தண்டுவடம் விரைவாகச் செயல்பட்டு விரலை எடுத்துக் கொள்ள தண்டுவடமே ஆணை இடுகிறது.

● எஸ்.விஜி, சென்னை - 23

? *தலைமுடியின் வளர்ச்சிக்கு ஷாம்பு நல்லதா? சீயக்காய் நல்லதா?*

! தலைமுடியின் வளர்ச்சிக்கு இரண்டுமே உதவாது. இரும்புச்சத்து மிகுந்த காய்கறிகள், பழங்கள், புரதச் சத்து நிறைந்த பருப்பு வகைகள் மற்றும் பால், முட்டை, மீன் போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ளுங்கள். தலைமுடி செம்மையாக வளரும்.



**புதிர் இங்கே! விடை கீழே!**

1. இன்சுலினைக் கண்டுபிடித்தவர் யார்?
   அ. பான்டிங்
   ஆ. ஃபிளெமிங்
   இ. வில்லியம் ஹார்வி
2. நினைவாற்றல் குறைவாக உள்ள நோய்க்கு என்ன பெயர்?
   அ. ஃபிலேரியா
   ஆ. மேனியா
   இ. அம்னீசியா
3. முதியோர் நலம் குறித்த படிப்பிற்கு என்ன பெயர்?
   அ. பீடியாட்ரிக்ஸ்
   ஆ. ஜீரியாட்ரிக்ஸ்
   இ. பேடியாட்ரிக்ஸ்
4. தோலுக்கு நிறமளிப்பது எது?
   அ. மெலனின்
   ஆ. கெரட்டின்
   இ. புரோட்டீன்
5. மனிதத் தண்டுவடத்தின் நீளம் எவ்வளவு?
   அ. 25 செ.மீ.
   ஆ. 35 செ.மீ.
   இ. 45 செ.மீ.

**டாக்டர் கு.கணேசன்**

# புதையல்



## 3

''நீயா?'' என்றான் பாலு. அவன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவேயில்லை. அந்தப் பாழடைந்த அலுவலகக் கட்டடத்தின் மாடிப் பகுதியில் பேசிக் கொண்டிருந்தவர்கள் சொன்ன விஷயத்தை ஒட்டுக் கேட்டு அந்த வெளியே பதுங்கியிருந்தவனுக்கு, சட்டென்று தோளில் கை வைத்து அழைத்தவன் - தன் உயிர் நண்பன் குடுமிநாதன் என்கிற பத்மநாபனே என்று தெரிந்தும் அதிர்ச்சி அத்தனை சீக்கிரம் நீங்கவில்லை.

''நீ எப்படிடா இங்க வந்தே?'' என்று ரகசியக் குரலில் கேட்டான் பாலு.

''உன்னைத் தேடித்தான் வந்தேன். சட்டுனு காணாமப் போயிட்டியே. வாத்தியார் தேடறார்'' என்றான் அவன்.

''சரி வா'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே பாய்ந்து இருபது தூரம் ஓடியபின் தான் நின்று மூச்சு விட்டான்.

''என்னடா பண்ணே அங்கே? ஏன் இப்படி பயந்து ஓடிவரே? அங்க யார் இருக்கா? நீ எதைப் பார்த்தே?'' என்றான் குடுமி.

''பயங்கரம்டா குடுமி. யாரோ பெரிய கொள்ளைக்காரங்க போலிருக்கு. இந்தத் தீவுல ஒரு பெரிய புதையல் இருக்காம். அடுத்த புதன்கிழமை ராத்திரி அதைத் தேடி எடுக்கப் போறாங்களாம். என்னவோ ஒரு பிளேட் வேற வருதாம் - புதையல் இருக்கற படத்தைக் காட்டி சினிமா மாதிரி பேசுறாங்க. நம்பவே முடியலை''

''என்னடா சொல்றே?'' என்று கத்தினான் குடுமி.

''உஷ்! உரக்கப் பேசாதே. அவங்க பேசிட்டிருந்ததை நான் கேட்டேன். ஆமா இல்லாத இந்தத் தீவுல எதுக்கு மூணு நாலு பேர் அந்தப் பாழடைந்த வீட்டு மாடில உட்கார்ந்து பேசணும்?''

''புதையலா? என்ன புதையல்?''

''தெரியலை. கதை மாதிரி இருக்கில்ல? அடுத்த புதன் கிழமை ராத்திரி இங்க அவங்க திரும்ப வரப்போறாங்க. புதையலைத் தோண்டி எடுக்கப் போறாங்களாம்...''

சிறிது நேரம் நண்பர்கள் இருவரும்

# தீவு

**பா.ராகவன்**

பேசாமல் நடந்து கொண்டிருந்தார்கள்.

"பேசாம நம்ம மகலிங்க வாத்தியார் கிட்ட சொல்லிடலாமாடா?" என்று கேட்டான் குடுமி.

"நீ ஏன் அங்கெல்லாம் போனேன்னு நம்மை உதைப்பாருடா. பேசாம இரு. நாம கொஞ்சம் யோசிப்போம்" என்று சொன்னான் பாலு.



அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அந்தக் கடலோர காவல்படை அதிகாரி மிகவும் நல்லவராகத் தெரிகிறார். பேசாமல் அவரிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டால் என்ன? எப்படியும் அந்தக் கொள்ளைக்காரர்கள் தீவில் தான் இருப்பார்கள். இருட்டும் வரை பகலில் அவர்கள் படகு ஏறிக் கிளம்பமாட்டார்கள். கிளம்பினால், கடலோரக் காவல் படையிடம் சிக்கிக் கொள்ள நேரும். அதற்குள் அதிகாரியிடம் சொல்லி, இப்போதே அவர்கள் அங்கே போய் பிடித்துக் கொள்ளச் செய்து விட்டால் என்ன?

குடுமிநாதன் சொன்னான் :

"ஹூம். அதுவும் கஷ்டம்டா. ஒரு வேளை நீ அங்கிட்ட சொல்லி, அவர் போய் பிடிக்கறதுக்குள்ள அவங்க போயிட்டாங்கன்னா, உன்னைத்தானே திட்டுவாங்க?"

"எப்படிடா போகமுடியும்? இது சின்னத்தீவு தானே?"

"மக்கு. நமக்குத் தெரியாமலா கொள்ளைக்காரங்க இங்க வருவாங்க. உனக்கும் எனக்கும்தான் இந்த இடம் புதுசு. அவங்களுக்குப் பழகின இடமா இருக்கும்" என்றான் குடுமி.

ஒரு வகையில் அவன் சொல்வதும் சரிதான் என்று பாலுவுக்குத் தோன்றியது. இது ஒன்றும் சாதாரண விஷயமில்லை. ஒருத்தர் மேல் புகார் சொல்லி பிடித்துக் கொடுப்பது என்றால் அவரைப் பற்றி முழு விவரங்களும் முதலில் தனக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் வேறெதாவது பேசிக் கொண்டிருந்துவிட்டு, தான் தவறாகப் புரிந்து கொண்டிருந்தால்? எத்தனை அவமானமாகிவிடும்! மேலும் அவர்கள் கொள்ளைக்காரர்களாகவே இருந்து, கடற்படை அதிகாரியிடம் இம்முறை தப்பித்துவிட்டால், நாளைக்கு நம்மை வந்து உதைக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? துரத்தினால் ஓடக் கூட முடியாது. இந்தக் குண்டு உடம்பை வைத்துக் கொண்டு!

வேண்டாத வேலைதான் என்று

தோன்றியது. "இப்ப வெளிய மூச்சு விட வேணாம்டா. கொஞ்சம் யோசிப்போம். அப்புறம் முடிவு பண்ணலாம்" என்று குடுமிநாதனிடம் சொன்னான்.

இருவரும் பேயறைந்தவர்கள் மாதிரி திரும்பி வந்து கொண்டிருப்பதைப் பார்த்த சக மாணவர்கள் "எங்கடா போயிட்டீங்க ரெண்டுபேரும்? வாத்தியார் கோபமா இருக்கார்" என்றார்கள்.

மகாலிங்க வாத்தியார் கடுங்கோபத்தில் கொழுந்தியாக இருந்தார். பாலுவைப் பார்த்ததும் "குண்டா! எங்கடா காணாமப் போனே?" என்று கேட்டார்.

"ஒன்னுமில்லை சார். காடு அழகா இருக்கேன்னு சும்மா கொஞ்சம் சுத்திப் பார்க்கப் போனேன். வழி மறந்துபோச்சு" என்றான் சுட்டென்று.

மனதுக்குள் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது. வாத்தியாரிடம் பொய் பொய் சொல்லுவதா?

"டேய் குண்டா! வள்ளுவர் என்ன சொல்லியிருக்கார்? பொய்மையும் வாய்மை உடைத்து எப்போ? ஏதாவது நல்லது நடக்கும்னா. நீ இப்ப உண்மைக் காரணத்தை உளறி வெச்சன்னா, ஏகப்பட்ட பிரச்னை வரும். முழுசா இன்னிக்கு வீடு போய் சேர முடியாது. பின்னால நிதானமா வாத்தியார்கிட்டயே விளக்கி சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கலாம். போட்டுக் குழப்பிக்காதே" என்று அவன் மனசாட்சி சொன்னது.

அன்று பிற்பகல் ஒரு மணி நேரம் தான் மாணவர் வகுப்பு நடந்தது. அதன்பின் மகாலிங்க வாத்தியார், மாணவர்களை அழைத்துக் கொண்டு தீவைக் கொஞ்சம் சுற்றி வந்தார். ரொம்ப உள்ளே போகாமல் முனை கட்டைச் சுற்றிப் பார்த்து இது என்ன மரம், அது என்ன செடி. இந்தத் தாழையைப் பார். அந்தப் பறவையைப் பார் என்று சொல்லிவிட்டு மீண்டும் கடற்கரைக்கே வந்து அமர்ந்தார்கள். கொஞ்ச நேரம் அலையில் நின்று பையன்கள் களித்தார்கள்.



மீன்களில் 20,000 வகை உண்டு.

"குண்டா, நீ தண்ணிய எப்போதும் வேணா நடந்து போகலாம்டா. கடல் அலை பால உன்னைத் தள்ள முடியாது" என்று வாத்தியார் ஜோக்கடித்தார்.

பாலுவுக்கு மனமெல்லாம் காலை அந்தப் பாழடைந்த வீட்டில் கேட்ட பேச்சுதான் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

"என்னடா?" என்று கேட்டான் குடுமிநாதன்.

"டேய் குடுமி. எனக்குச் சந்தேகமே இல்லைடா. நிச்சயம் அவங்க பேசினது ஏதோ திருட்டுக் காரியமாத்தான். பிரமையெல்லாம் இல்லை. தெளிவாவே இருக்கேன். ஏதோ பெரிய சதி பண்றாங்க. அவங்க யாரு? என்ன சதி? இங்க என்ன புதையல் இருக்கு? அது எப்படி அவங்களுக்குத் தெரிஞ்சது? எப்படி கடற்படை அதிகாரிகளுக்குத் தெரியாம போச்சு? இவங்க இங்க அடிக்கடி வருவாங்களா? இதையெல்லாம் நாம கண்டுபிடிக்கணும்டா" என்றான் தீவிரமாக.

"என்னடா சொல்ற?" அதிர்ந்தே போனான் குடுமி.

"ஆமாடா. நாமே கண்டுபிடிப்போம். முதல்ல நான் காதால கேட்டதெல்லாம் உண்மைதானான்னு தெரிஞ்சுக்கணும். அவங்க என்ன பண்றாங்க, எப்படி பண்றாங்கன்னு ஒளிஞ்சு இருந்து பார்க்கணும். நிச்சயமா தப்புக் காரியந்தான் பண்றாங்கன்னு தெரிஞ்சதுக்கு அப்புறம் வாத்தியார் கிட்ட சொல்லி, கடற்படை ஆபீசர்கிட்ட சொல்லிடுவோம். அப்புறம் அவங்க பார்த்துப்பாங்க" என்றான் பாலு.

"அதுசரி நீ எப்படி கண்டுபிடிப்பே? விளையாடறியா? அடுத்த புதன் கிழமை நீ இங்க வரப்போறியா?" என்றான் குடுமி.

"நான் மட்டும் இல்லே. நீயும் வரே. நாம ரெண்டுபேரும் சேர்ந்தே கண்டு பிடிப்போம்!" என்று சொன்னான் பாலு.

குடுமிநாதனுக்கும் அந்த விஷயம் திகிலூட்டும் பயமாகத்தான் இருந்தது. என்றாலும் எப்படி மீண்டும் பனிக் கீழுக்கு வர முடியும்? கடற்படைப் படகு உதவி இல்லாமல், உடன் அதிகாரிகள் வராமல் இங்கு எப்படி வருவது? நீச்சலடித்தே வரலாம் என்றாலும் தன்னால் முடியும். இந்தக் குண்டனால் எப்படி முடியும்? அவனுக்கு நீச்சல் கூடத் தெரியாதே! தண்ணீரில் தூக்கிப் போட்டால் உருண்டைக் கிழங்கு மாதிரி அமுங்கி விடுவானே.

தன் சந்தேகத்தை அவன் பாலுவிடம் சொன்னபோது அவன் கொஞ்சம் யோசித்தான். பிறகு, "தெரியலைடா. ஏதாவது வழி கண்டுபிடிப்போம். ஆனா நாம கண்டுபிடிச்ச அடுத்த புதன்கிழமை இங்க வந்தே ஆகணும். என்னதான் நடக்கப்போகுதுன்னு பார்த்தே தீரணும். ஒரு கொள்ளைக் கூட்டத்தைப் பிடிச்சுக் குடுக்கறதுன்னா சாதாரணமான விஷயமா? நாம அதை செஞ்சே ஆகணும். ஒரு தப்பு நடக்கும்போது பார்த்துக்கிட்டு சும்மா இருக்கக் கூடாது. ஏதாவது வழி கண்டுபிடிப்போம்" என்றான்.

மாலை அவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்ப சரியாக நான்கு மணிக்குக் கடற்படை ஏற்பாடு செய்துவிட்டது. புதிதாக வேறு சில அதிகாரிகள் இம்முறை படகில் வந்தார்கள். மகாலிங்க வாத்தியாருடன் கை குலுக்கி, மாலை வேளைத் தேநீர் அருந்தி, பிஸ்கெட் சாப்பிட்டு, எல்லா மாணவர்களுக்கும் ஒரு சான்றிதழ் வழங்கி சிறியதாக ஒரு விழாவே நடத்திவிட்டார்கள்.

போட் புறப்பட்டதும் பாலுவும் குடுமியும் நேரே புனைவனிடம் போனார்கள். "வணக்கம் சார். என் பேர் பாலு. இவன் என் பிரெண்ட் பத்மநாபன். ரெண்டுபேரும் எய்த் ஸ்டாண்டர்ட் படிக்கிறோம்" என்றான் பாலு.

"அப்படியா?" என்றார் புனைவன். இவர் காலை அழைத்து வந்த புனைவன் இல்லை. வேறு ஒருவர்.

"நீங்க இந்தத் தீவுக்கு அடிக்கடி வருவீங்களா சார்?" என்றான் குடுமி.

"எப்பவாச்சும் வருவோம் தம்பி. இங்கல்லாம் எங்களுக்கு வேலை கிடையாது. இன்னைக்குத் தாண்டி இன்னும் நூறு மைல் போனா வைனா தீவுன்னு ஒன்னு இருக்கு. அங்க நம்ம ஆபீஸ் இருக்குது. அங்க அதிகாரிங்க போவாங்க. அப்ப போறது தான்" என்றார் புனைவன்.

"இங்க கூட உங்க ஆபீஸ் ஒன்னு இருக்கசே" என்றான் பாலு.

"இருந்தது இப்ப இல்லை. ஒரு பிஸ்நஸ் இருக்குமோ? முன்ன அங்க பீப்பி எடுக்கற ஒங்க வருவாங்க. அங்கிப்ப மீன் கொள்முதல் பண்றதும் நடக்கும். போன வருஷம் சந்துபோட்டுக்கு அங்க மீன் வாத்து நின்னு போச்சி. ஏன்னும் சரியா கெடைக்கல திங்கலை. அதனால எல்லாரும் வைனாத் தீவு பக்கம் போக ஆரம்பிச்சிட்டாங்க..." என்றார் புனைவன்.

"ஓ" என்று கேட்டுக் கொண்டு இருவரும் அதிகாரி அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

"இப்ப என்னடா பண்றது?" என்றான் குடுமி.

"எதுக்கு?"

"நாம அங்க திரும்பப் போறதுக்கு?"

"அதுவா. அதுக்கு நான் ஏற்கனவே ஒரு வழி கண்டுபிடிச்சிட்டேனே?" என்று குறும்பாகச் சிரித்தான் பாலு.

"என்ன வழி?" உடனே பரபரப்பானான் குடுமிநாதன்.

"சொல்றேன். ஆனா இப்ப இல்ல!" என்று கண்ணடித்தான் பாலு!

(தொடரும்)



கடல் குதிரைகளில் 32 வகை உண்டு.





# அனைவரும்



உலகம் முழுவதும் அதிகமான மக்களால் விரும்பப்படும் வண்டுகளில் முதல் இடத்தில் இருக்கிறது. கண் கவர் பிரகாசமான வண்ணங்களே டை அதிகமாக விரும்புவதற்கு காரணம். லேடி பக், லேடி பீட்டில் என்ற பெயர்களும் க்கு உண்டு. தமிழ் உட்பட உலகம் முழுவதும் பல்வேறு புராணக்கதைகளில் இடம் பெற்றுள்ளது. இது மட்டுமின்றி விண்வெளிக்குச் சென்று திரும்பிய பெருமையும் க்கு இருக்கிறது.







சிவப்பு, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு வண்ணங்களில் கள் காணப்படுகின்றன. உடலின் மேற்புறம் கறுப்பு வண்ணப் புள்ளிகள் இருக்கும். அரிதாக கறுப்பு உடலில் சிவப்பு வண்ணப் புள்ளிகளுடன் காணப்படுவதும் உண்டு. இந்தப் புள்ளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு இனத்திற்கும் வேறுபடும். 2 முதல் 20 புள்ளிகள் வரை கூட இருக்கும். மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இனங்கள் ல் உண்டு.

க்கு ஆறு கால்கள். ஒவ்வொரு பக்கத்துக்கும் 3 விதம் அமைந்துள்ளன. இது தவிர 2 உணர் கொம்புகளும் உண்டு. பறவைகள்தான் ன் முக்கிய எதிரி. எதிரிகளைப் பார்த்துவிட்டால் இறந்து விட்டதைப் போல் நடித்து தப்பி விடும்.


செடி, கொடிகளை அரிக்கும் சின்னஞ்சிறு பூச்சிகள்தான் ன் முக்கிய உணவு. ஒரு ஒரு நாளைக்கு 200 பூச்சிகள் வரை சாப்பிடக் கூடியது. செடிகளை நாசம் செய்யும் இந்தப் பூச்சிகளைச் சாப்பிடுவதால் தோட்டக்காரர்களுக்கு சிறந்த நண்பனாக இருக்கிறது. சிலவகை கள்



# விரும்பும் லேடிபேர்ட்!







எஸ்.சுஜாதா

கம்பளிப் புழு, பூந்தேன், எறும்புகள் போன்றவற்றை விரும்பிச் சாப்பிடுகின்றன. எறும்புகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைப்பவர்கள் களை வளர்க்கின்றனர்.

3 மி.மீ. முதல் 10 மி.மீ நீளம் வரை கள் காணப்படுகின்றன. சாதாரண கள் 4 மி.மீ முதல் 8 மி.மீ வரை இருக்கின்றன.

உடல் பல கண்டங்களால் ஆனது. மிகச் சிறிய சிறகுகளும் உண்டு. இரண்டு புள்ளியுடைய ஒரு நொடிக்கு 75 முதல் 90 தடவை சிறகுகளை அசைக்கக் கூடியது.

உலகம் முழுவதும் தோட்டங்கள், காடுகள், மலைகள், சமவெளிகள் என எல்லா இடங்களிலும் கள் வாழ்ந்து வருகின்றன.

தட்பவெப்பம், உணவைப் பொறுத்து முட்டையிட ஆரம்பிக்கும். ஒருமுறை முட்டையிடும் காலத்தில் 1000 முட்டைகள் வரை பெண் இடும். முட்டைகள் மஞ்சள் நிறத்தில் இருக்கும். வெப்ப நிலையைப் பொறுத்து முட்டைகளிலிருந்து 4 அல்லது 5 நாட்களில் குஞ்சுகள் வெளி வருகின்றன. முட்டை, லார்வா, பியூப்பா என பல நிலைகளைக் கடந்து முழுமையடைகிறது.

ஆண் டை விட பெண் உருவில் பெரியது. ன் அறிவியல் பெயர் Coccinellidae.

# மின்சார

மிக்ஸர் பிட்ஸ்

நாம் சமையலுக்குப் பயன்படுத்தும் பெருங்காயம் பெருலா என்ற செடியில் இருந்து கிடைக்கிறது. இச் செடி இந்தியாவில் கிடையாது. வளைகுடா நாடுகளில் மட்டுமே விளையும் இந்தச் செடியின் வேர்கள் மிகவும் பருத்து காணப்படும். ஓரளவு வளர்ந்ததும் இச் செடியின் இலைகள் உலர்ந்து கீழே உதிர்ந்து விடுகின்றன. இலைகள் முழுவதும் உதிர்ந்ததும் செடியின் வேர்ப்பகுதியில் இருக்கும் மண்ணை அகற்றிவிட்டு வேர்களைக் கத்தி கொண்டு



ஆழமாகக் கீறி விடுவார்கள். அப்படி கீறும் போது வெளிப்படும் பால் போன்ற திரவத்தை மண் பாத்திரங்களில் பிடித்து உலரவைப்பார்கள். இரண்டு நாள் கழித்து அதைக் காய்ந்த பிறகு எடுத்தால் பெருங்காயம் விற்பனைக்கு ரெடி!

- கோ. செந்தமிழ்ச் செல்வி, காஞ்சிபுரம்

திபெத்தியர்களின் மூக்கு, மற்ற இனத்தவரின் மூக்கை விட அகலமானது. காரணம் என்ன? கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லச் செல்லக் காற்றின் அடர்த்தி குறைவு ஆதலால், அங்கு வசிக்கும் மக்கள் தங்களுக்குத் தேவையான காற்றைப் பெற



அதிகமாக சுவாசிக்க வேண்டும். ஆதலால் இயற்கையே திபெத்தியர்களுக்கு அகலமான நாசித்துவாரங்களையும், அகன்ற மூக்கினையும் கொடுத்திருக்கிறது.

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

ஈல் மீன் நன்னீரில் வாழும். இது இரவில்தான் வெளியில் வந்து இரையைத் தேடும். தென் அமெரிக்காவில் உள்ள அமேசான் நதியின் ஆழமற்ற பகுதியில் இம் மீன்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை மின் சக்தியை வெளிப்படுத்தக் கூடியவை. இம் மீன்களின் உடலிலிருந்து தோன்றும் மின்சக்தி நமது இல்லங்களில் பயன்பட்டு வரும் வோல்ட்டேஜை விட அதிகம். இவை தோற்றுவிக்கும் மின்சாரம் சுமார் 600 வோல்ட்டுகள். இந்தச் சக்தியின் மூலம் இவை பெரிய மிருகங்களையும் செயலற்றுப்



# மீன்!

போதும்படி செய்கின்றன.

- செ. ஆனந்த பார்வதி, பத்தாம் வகுப்பு,
மௌண்ட் சீயோன் மெட்ரிகுலேஷன்
மேநிப்பள்ளி, புதுக்கோட்டை.



தென் ஆப்பிரிக்கப் பாலைவனங்களில் 'பச்சிப்போடியம்' என்னும் ஒருவகை செடியினம் காணப்படுகிறது. இந்தச் செடியின் நுனி எப்போதும் வடக்குத் திசை பக்கமே சாய்ந்து நிற்கும் தன்மை உடையது. இதனாலேயே இந்தச் செடிக்கு திசைகாட்டிச் செடி என்று பெயர். திசை தெரியாமல் பாலைவனங்களில் பயணம் மேற்கொள்ளும் பயணிகள் இந்தச் செடியைப் பார்த்து வடக்குத் திசையை அறிந்து கொள்கிறார்கள்.

- எஸ். சௌம்யாமணி, பதிஸ்லாம்



வகுப்பு, புனித அலாய்சியஸ்
ம.மே.நி. பள்ளி, தூத்துக்குடி

ரோமு மஞ்சுவலம் என்ற ஊர் இன்று நாராகம் என்ற பெயரில் வழங்குகிறது.

தண்ணீரில் மிதக்கும் உலோகம் பொட்டாசியம்.

எரிமலையே இல்லாத ஒரே கண்டம் ஆஸ்திரேலியா.

பெரு நாட்டில் மக்கள் உருளைக் கிழங்கை தெய்வமாக வணங்குகின்றனர்.

யானைகள் போர் செய்யுமிடம் தருக்கம் என்று வழங்கப்படுகிறது.

- எஸ். உமா,
சோழசம்பேட்டை



சீனர்கள் விலாசம் எழுதும்போது பெயருக்குப் பின்னர் தான் "வீட்டை" போடுகிறார்கள். சீனப் புத்தகங்கள் கடைசிப் பக்கத்திலிருந்துதான் தொடங்கும். முக்கால் என்பதை சீனர்கள் 4/3 என்றுதான் எழுதுவார்கள். எல்லா பின்னங்களும் இப்படித் தான். இவர்கள் தேதி, மாதம், வருடம் என்ற முறையில் எழுதுவது இல்லை. முதலில் வருடம், மாதம், தேதி என்றுதான் எழுதுகிறார்கள்.

- மு. நூர்ஜான், கும்பகோணம்

கண்கள் உலர்ந்து போனால், அது தன் பணியைச் செய்ய முடியாது. எனவே கண்களில் எப்போதும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். நாம் படுத்தால் அந்தக் கருவிழி சுத்தப்படுத்துவது கண்ணீர்தான். இமை கொட்டும்போது விழிகளைத் துடைத்துக் கொள்கிறோம். எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் நீர் ஒரு மெல்லிய குழாய் வழியாக மூக்குக்குப் போய் விடுகிறது. அழும்போது அடிக்கடி மூக்கைச் சிந்த வேண்டியிருப்பது இதனால்தான். அதிகமாகச் சிரிக்கும்போது கண்களைச் சூழ்ந்திருக்கும் தசைகள் சுருங்குவதால் கண்ணீர், மூக்குக்குச் செல்லும் குழாய் அடைபட்டு, வெளிப்படுகிறது. ஆனந்தக் கண்ணீர் என்பது இதுதான்.

- ம. சந்தோஷ், மூன்றாம் வகுப்பு,
சிவகாசி அரிமா மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி, சிவகாசி





# நீ ஒளி தருவது தெரியாதோ

## உங்கள் நூலகம்

**மின்னும் மின்னும் விண்மீனே**, த.வி. வெங்கடேஸ்வரன், பக்.112, ரூ.முப்பத்தைந்து, அறிவியல் வெளியீடு, 245, (ப.எண்.130/3), அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், சென்னை - 86.

'மின்னும் மின்னும் விண்மீனே நீ ஒளி தருவது தெரியாதோ?' என்று நமக்கு அடிக்கடி சிந்தனை தோன்றும். இது மட்டுமின்றி இரவு வான், விண்மீன்கள், ஒளி தரும் சேதி, விண்மீன்களின் பிறப்பும் இறப்பும், பால்வழி மண்டலம் போன்று எண்ணற்ற பிரபஞ்சம் பற்றிய கேள்விகளுக்கு இந்நூல் விளக்கமளிக்கிறது. வானியல் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்களுக்கு இது சிறந்த நூல்.



**பாரதி என் தந்தை**, தங்கம்மா பாரதி, பக்.132, ரூ.20/-, பழனியப்பா பிரதர்ஸ், 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

பாரதியாரின் அருமைப் புதல்வி உலகம் போற்றும் தன் தந்தையாரைப் பற்றி எழுதியுள்ள அனுபவங்களின் தொகுப்பு. சிறுவருக்கானவை என்று வரம்பிட முடியாவிட்டாலும் தமிழையும், பாரதத்தையும் நேசித்த புதுயுகக் கவிஞரின் எண்ணங்கள் எப்படியிருந்தன என்பதை அவரது மகளின் எழுத்தில் படித்து மகிழ அருமையான வாய்ப்பு. பாரதியை அறிந்து கொண்டு வியக்கவும் மகிழவும் ஏராளமான நிகழ்ச்சிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**சிறுவர்களுக்கான அறிவியல் சிறுகதைகள்**, [illegible], பக்.120, ரூ. முப்பத்தைந்து, நந்தினி பிரசுரம், 57-பி, பக்கிரி சாலை, தியாகராய நகர், சென்னை - 17.

25 அறிவியல் சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். கூழ் முட்டை, நல்ல முட்டை, ஆவிற்று, மாயத் திருகல், எண்ணங்களின் பயணம், கோள்வெளிப் பிரச்சனை என ஒவ்வொரு கதையிலும் அறிவியலை மிகவும் எளிமையாகவும் அழகாகவும் விளக்கியிருக்கிறார் ஆசிரியர்.

**இனிக்கும் புதிர்க் கணக்குகள்**, தர்மராஜ் ஜோசப், பக். 280, ரூ.அறுபது, நந்தினி பிரசுரம், 57-பி, பக்கிரி சாலை, தி. நகர், சென்னை - 17.

நண்பர்கள் ஏழு பேர். ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் சேர்ந்து, இரண்டிரண்டு பேராக போட்டோ எடுக்க விரும்பினார்கள். அப்படியென்றால் மொத்தம் எத்தனை போட்டோ எடுக்க வேண்டியது வரும்?

நண்பர்கள் :
a, b, c, d, e, f, g

| | |
|---|---|
| ab, ac, ad, ae, af, ag | 6 |
| bc, bd, be, bf, bg | 5 |
| cd, ce, cf, cg | 4 |
| de, df, dg | 3 |
| ef, eg | 2 |
| fg | 1 |
| மொத்தம் | 21 |

இப்படி 100 சுவாரசியமான கணக்குகளை அளித்திருக்கிறார் ஆசிரியர்.

- சே



# நம்பிக்கை தந்த பரிசு!

தன்னுடைய படைகளை நெப்போலியன் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அங்கிருந்த படை வீரர்களுக்கு ஆணை பிறப்பித்துக் கொண்டிருந்தபோது அவருடைய குதிரையின் கழுத்திலிருந்த கடிவாளம் நழுவி கீழே விழுந்துவிட்டது.

அதிவேகமாகப் பாய்ந்து ஓடத் தொடங்கியது குதிரை. குதிரை வேகமாக ஓடுவதைப் பார்த்தான் சேவகன் ஒருவன்.

உடனே அவன் குதிரைக்கு முன்னால் ஓடிச் சென்று வேகமாக குதிரையின் கடிவாளத்தை லாவகமாகப் பிடித்து சக்கரவர்த்தியின் கையில் கொடுத்து விட்டான்.

தனக்கு உதவி செய்த அந்தச் சேவகனிடம் "நான் உங்களுக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் தளபதியே!" என்று கூறினார் நெப்போலியன்.

அச் சேவகன் நெப்போலியனின் இந்த வார்த்தைகளைக் கேட்டு அதை அப்படியே நம்பினான். அடுத்த நிமிடமே நெப்போலியனுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, "ஐயா! நான் எந்தப் படைக்குத் தளபதி?" என்று கேட்டான்.

தன் வார்த்தையின் மேல் அவனுக்குள்ள நம்பிக்கையைப் பார்த்து ஆச்சரியப்பட்ட நெப்போலியன் சற்று நேரம் யோசித்துவிட்டு, "என்னுடைய பாதுகாப்புப் படைக்கு நீதான் தளபதி" என்று கூறிவிட்டு குதிரைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

அந்தச் சேவகன் அதிகாரிகள் குழுவைச் சந்தித்தான். பாதுகாப்பு படைப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி சேவகனை இகழ்ச்சியோடு பார்த்து "நீ யார்?" என்று கேட்டார்.

"நான் பாதுகாப்புப் படை தளபதி" என்றான் சிறிதும் அஞ்சாமல்.


"அதோ சக்கரவர்த்தியே வருகிறார். போ" என்று கூறி விரட்டினார்.

சற்றும் அஞ்சாமல் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தான் சேவகன். துணிவோடு நிற்கிற அச்சேவகனையும் உயர் அதிகாரிகளையும் பார்த்த நெப்போலியன் அங்கு என்ன நடந்திருக்கும் என்பதைத் தானாகவே யூகித்துக் கொண்டார்.

அந்தச் சேவகனின் தோளில் தட்டியபடியே "இவன்தான் இனி என்னுடைய பாதுகாப்புப் படை பிரிவுக்குத் தளபதி" என்று கூறினார்.

உடனே அச்சேவகன் "இனிமேல் நான் தளபதியாக மாறப் போவதில்லை. நீங்கள் என்னை தளபதியே என்று கூறிய அந்த நிமிடத்திலேயே நான் தளபதிதான்" என்று கூறினான்.

- கமலம், ஈரோடு




இன்று என்ன செய்தீர்கள்?
இன்று பார்த்த பூவை ✓ செய்யவும்.
இன்று சாப்பிட்ட காயை ✓ செய்யவும்.
இன்று
இரவு இருக்கும் 3 பெயர்கள்
1.
2.
3.
இன்று நீங்கள் சாப்பிட்டதை ✓ செய்யவும்.
இன்று பார்த்த பிராணியை ✓ செய்யவும்.
இன்று எழுத உபயோகப்படுத்திய பொருளை ✓ செய்யவும்.



இன்று வானில் பறந்ததை ✓ செய்யவும்.
நீங்கள் உருவத்தை யவும்.
இன்று உங்கள் வீட்டுக்கு வந்த பூச்சியை ✓ செய்யவும்.
இன்று விளையாடியதை ✓ செய்யவும்.
இன்று நீங்கள் அணிந்த காலணியை ✓ செய்யவும்.
கள் பயணம் களத்தை ✓ யவும்.
யாரவர் ______
இன்று நீங்கள் பார்த்த மூன்று சிவப்பு நிறப் பொருட்கள்

# எல்லோரையும்

## என் ஆசிரியர்

### தமிழைக் கற்றுத் தந்தவர்

என்னைக் கவர்ந்த ஆசிரியை என் பாதையிட எனக்குக் கலைக் கற்றுத் தந்த



ஆசிரியை என்பதே சி. மாணவர்களுக்குத் தங்கள் சிறு வயதில் ஏற்பட்ட நிகழ்ச்சியே என்றும் நினைவில் இருக்கும். அதுபோல சிறு வயதில் கற்பித்த ஆசிரியர்களே என்றும் முதல் இடம் பெற்றிருப்பர். அந்த விதத்தில் எனக்குப் பாடம் கற்பித்த, தமிழை ரசிக்க வைத்த, மதிப்பெண் எடுக்க வைத்த, நல்ல மாணவியாக அடையாளம் காட்டிய என் அன்புத் தமிழ் ஆசிரியை ரஜினி அவர்களே என் மனம் கவர்ந்த ஆசிரியை. நான் விவேகானந்தா வித்யா லயாவில் பயின்றபோது ஆறாம் வகுப்பு வரை தமிழ் ஆசிரியையாகப் பணி புரிந்தார். அதன் பின் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதால் சில மாதங்கள் வரவில்லை. வேறு ஆசிரியை வந்தார். ஒரு பெரிய மாற்றத்தை உணர்ந்தேன். ம் ஆசிரியை மாணவர்களிடம் காட்டும் தனி கவனம், கூடிய உழைப்பு, பாடத்தைக் கற்பிக்கும் புதுமையான பாங்கு, மாணவர்களை நான் பாடம் நடத்தும் திறன் மூலம் ஈர்த்தல் என்பது எல்லோருக்கும் அமைந்து விடாத ஒன்று. அவை அத்தனையும் அவரிடம் இருந்தது. அதனால் நான் இன்று வரை நான் தமிழில் சிறந்த மாணவியாகத் திகழ் கிறேன். அவர் இன்று எங்குப் பணி யாற்றினாலும் அவர் கற்றுத் தந்த விஷயங் கள் என்றும் எங்களை நல்வழிப்படுத்தும்.

- பி. கார்த்திகா, ஒன்பதாம் வகுப்பு,
பக்தவத்சலம் மேல்நிலைப் பள்ளி,
சென்னை

### தண்டனையின்றி...

என் வேதியியல் ஆசிரியரைப் போல் எங்கும் இருக்க முடியாது. என் வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களிடமும் நன் மதிப்பைப் பெற்றவர். ஒரு முறை தேர்வு வைத்திருந்தார். அப்பொழுது இரு மாண வர்கள் காப்பி அடித்து எழுதிக் கொண் டிருந்தனர். அதைப் பார்த்தவர் அவர்களைப் பிடித்தால் அனைத்து மாணவர்கள் முன்பும் அவமானம் பெறுவர் என்று எண்ணி, நாசுக் காக "அடுத்தவன் பேப்பரைப் பார்த்து எழுதுவது அவன் எடுத்த வாந்தியைத் திரும்பச் சாப்பிடுவது போல" என்றார்.

உடனே அந்த இரு மாணவர்களும் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டனர். அவர் வகுப் பறையில்



# ஈர்த்தவர்!



கோபமாக நடந்து நான் பார்த்ததே இல்லை. தவறு செய்தவர்களைக் கூட திட்டமாட்டார். சந்தேகம் என்றால், 'நான் நடத்தும் பாடம் புரியவில்லை' என்று கூறி திரும்பவும் நடத்துவார். மாணவர்கள் தூங்கிவிடாமல் இருக்க, அவ்வப்போது சில நகைச்சுவைகளைக் கூறி வகுப்பறை யையே சிரிப்பறையாக மாற்றுவார்.

- ப. கார்த்திக், பதினோராம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர்



## பொது அறிவு...

எங்கள் ஆசிரியர் கண்ணன் 'ஆசிரியப் பணி ஓர் அறப்பணி' என்பதை உணர்ந்து ஒரு நாள் கூட விடுப்பு போட்டது கிடை யாது. தினமும் கூட ஜோக், விடுகதை, தனி நடிப்பு, பாடல், கதை என்று ஏதேனும் வழி களில் சந்தோஷப் பட செய்ய முயல்வார். அதையெல்லாம் பின்பற்றுவார். எந்நேரமும் ஒரு பொது அறிவுப் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டே இருப்பார். பாட வேளை இறுதியில் 3 பொது அறிவு கேள்விகளைக் கேட்டு விடைகளை அறிந்து வரச் சொல்லுவார். ஒரு நல்ல நண்பர் போலப் பழகுவார். எங்களுடன் அமர்ந்து உணவைப் பகிர்ந்து சாப்பிடுவார். விளையாடுவார். எங்களுடைய பிறந்த நாளுக்கும் பரிசு வாங்கிக் கொடுப்பார். நாங்கள் தவறு செய்யும்போது ஒரு நண் பன் போல எங்களுக்கு அறிவுரை வழங்குவார். பேப்பர், பணம், பேனா இல் லாத மாணவர்களுக்கு உதவி செய்வார்.

- ஏ. ஜான்சி, எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, பூவாளூர், திருச்சி

## ஞாபகம் வருதே!

எனக்கு மிகவும் பிடித்த ஆசிரியர் மணிச் செல்வம். அவர் கணித ஆசிரியர் மட்டுமல்ல, மாணவர்களின் மனங்களை யும் படித்தவர். கணக்கு முழுக்க அக்கறை கொண்டு கண்டிப்பு. மாணவர்களை முன் னேற்ற வேண்டும் என்று என்றும் நல்ல மனம் கொண்டவர். எப்பொழுது சந்தேகம் கேட்டாலும் மனம் கோணாமல், சலிக்கா மல் அவர் கற்றுத் தருவார். புத்திசாலி மாணவர்களைப் புகழ்ந்து பாராட்டத் தவற மாட்டார். படிக்காத மாணவர்களைப் பக்குவ மாகக் கூப்பிட்டு அறிவுரை சொல்லி, அவர்களை நல்ல மதிப்பெண் பெறச் செய்து விடுவது அவரின் சிறப்பு. காங் கேயம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பணி புரியும் ஆசிரியரை நான் ரொம்பவே மிஸ் செய்கிறேன். என் அப்பாவின் வேலை மாற் றம் காரணமாக நாங்கள் மதுரைக்கு வந்து விட்டோம். கணக்குப் புத்தகத்தைப் பிரிக் கும் பொழுது என் ஆசிரியர் முகமே ஞாபகத்துக்கு வருகிறது.

- எஸ்.சேவியர் இன்ஃபென்டாராஜ், மதுரை



# ஒட்டக்கூத்தர் பாடலுக்கு


சிவசங்கர முதலியார் - வண்டார்குழலி இவர்களின் மைந்தர் ஒட்டக்கூத்தர். பெற்றோர் வைத்த பெயர் அம்பலக் கூத்தர்.

முதல் குலோத்துங்கச் சோழனின் மகனான விக்கிரம சோழன். கி.பி.1120-ல் பட்டத்துக்கு வந்தான். 'அரும்பகைத் தொள்ளாயிரம்'' என்ற பிரபந்தத்தைப் பாடினார் அம்பலக் கூத்தர். அத்தனையும் விக்கிரமனின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றிப் பாடியது.

நடுவில் ஒரு பாடலை எடுத்து ''இதோடு ஒட்டும்படி ஒரு பாட்டுப் பாடு'' என்று வேந்தன் கூற, புலவர் அரைக்கணமும் தாமதிக்காமல் பாடினார். அதேபோல 'விக்கிரம சோழனுலா'வில் வரும் வேறு வேறு ஈரடிகளை இணைத்து ஒரு வெண்பா பாடச் சொல்லி கேட்டபோது அதையும் சிறப்பாகச் செய்தார் கூத்தர்.

''இன்றுமுதல் நீங்கள் அம்பலக் கூத்தரில்லை! எதைக் கொடுத்தாலும் ஒட்டிப்பாடும் ஒட்டக் கூத்தரையா'' என்று மன்னவன் கட்டிப் பிடித்துக் கொண்டான். அன்றுமுதல் பெற்றோரிட்ட பெயர் மறைந்து, மன்னன் வழங்கிய பட்டப் பெயரே நிலைத்தது.

மன்னன் கூத்தருக்குப் படி நிறைய குங்குமம், படுக்கக் கம்பளம், காதுகளுக்குக் குண்டலம், கைகளுக்கு பொற் கங்கணம், ஏறிச் செல்ல யானை, விருது முழங்கச் சங்கு என்று வரிசை வழங்கி 'கவிச் சக்கரவர்த்தி' என்ற விருதினையும் கொடுத்து 'ஆஸ்தான



# இரட்டைத் தாழ்ப்பாள்!

• ஆர்.பொன்னம்மாள் •



பாண்டியனின் ஆஸ்தான புலவர் புக
ழேந்தி. அவருக்கு இரத்தம் கொதித்தது.

"காவிரிக்கு வைகை இணையாகாதது தான்! காவிரி, காகம் கவிழ்த்தது! வைகை சிவனருள் செய்தது! சிவனது 64 திருவிளையாடல்களும் உறையூரிலா நடந்தது? எங்கள் கொடியிலுள்ள மீனாய் அவதரித்த திருமாலே தங்களை மீட்டு வந்தார்! சிறுபுலி என்ன செய்தது? வைகைக் கரையடைக்க சிவனார் மண் போட்டார். காவிரிக்கு மண் போட்டவர் எவர்? நீங்கள் சூரியகுலம்; நாங்கள் சந்திர குலம் என்கிறீர்கள்? கைலாசவாசன் ஈடாமுடியிலிருப்பது சந்திரனா, சூரியனா? எங்கள் வேப்பு மாலையை அணிந்தவன் தூக்கை வீரத்தின் அடையாளம் தூக்கா என்பதை வெட்டிப் பாட முடியுமா உம் மாலே! நானறக்கு முக்தியளித்த நகர் எனும் ஒரு கொண்ட க்ஷேத்திரமாக்கும் பாண்டிய மண்டலம்!" என்று புகழேந்தி பாட 'தூக்கமிட இது நேரமில்லை! காரிய சாதனையே முக்கியம்' என மௌனமா யிருந்தார் கூத்தர்.

பொழுது போக்காய் பாடியதாக வேறுக் குச் சிரித்து பாண்டியனின் சம்மதம் பெற்று ஊர் திரும்பினார். திருமண ஓலையைக் கண்டு சோழ நாடே குதூகலித்தது.

சோழர் செய்தி யானை மீது பறை யறிவிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் வரி விலக்களித்தார் வேந்தன்.

ஒட்டக்கூத்தர் மட்டும் திருமணத் திற்குச் செல்லவில்லை! மன்னரின் பிரதி நிதியாக இருந்து ஆட்சியைக் கவனித்துக் கொண்டார். மன்னரிடம் வெகுமதியாகப் புகழேந்தியைக் கேட்கும்படி சொல்லி யிருந்தார்.

குலோத்துங்கனும் பாண்டிய ராஜ குமாரியிடம் தன் விருப்பத்தைக் கூற சோழ நாட்டுக்கு சீதனமாக வந்தார் புகழேந்தி. அரசன் அந்தப்புரமே கதியாக இருக்க புகழேந்தியைச் சிறையில் தள்ளினார் கூத்தர்.

ஒரு நல்ல நாளில் குலோத்துங்கன் நகர்வலம் வந்தான். சிறைக்கூடத்தில் புகழேந்தியைக் கண்டதும் அவன் மனம் வேதனைப்பட்டது.

கூத்தரிடம் வந்து புகழேந்தி சிறைப் படக் காரணத்தைக் கேட்டார்.

"மன்னா! காரியம் பெரிதென்று அன்று வாய் மூடியிருந்தேன்! 'அகஸ்தியர் கட லையே குடித்தவர். என் திருமணத்தில் தென் மண்டலம் உயர உயர மக்களுக்கு நடக்க பெரிதாக வந்தவர். அவர் கமண்ட லத்திலுள்ள காவிரி சாதாரணமானதா? புலி தூக்கையின் வாசனை. ஒரு புறாவுக்காகத் தன் தொடைச் சதையை அறுத்துத் தந்தது இந்தச் சோழ மண்டலம். இப்படியெல்லாம் பாட என்னாலும் முடியும்" என்று கூத்தர் கொதிக்க, அவரைச் சமாதானப்படுத்தி விட்டு சிறைக்கு வந்தான் அரசன்.

'மாரிக்குயில் வாளி வேங்கை முன்' என்று கூத்தரின் பாடலைப் புகழேந்தி யிடம் கொடுத்து, "இதை ஓட்டிப் பாடுங்கள்" என்றான்.

"மானவன் நான் அந்த வாளி வேங்கையும்" என்று பாடினார் புகழேந்தி. 'வேங்கை ஒட்டக்கூத்தர்; நான் மான்' என்பது ஒரு பொருள். 'மான முடையவன் நான். நன்றி கொன்று பேசா திருக்க முடியுமா?' என்பது மறு பொருள். மன்னர் அவர் தமிழ்ப்



ஆழ்கடலின் அடி மட்டத்தில் வாழும் மீனுக்கு 'அபிசோல் மீன்' என்று பெயர்.

புலமை கண்டு மயங்கினாள். அவரை 'கூத்தர் மனம் நோகாதபடி விடுவிப்பதெப்படி' என்றும் சிந்தித்தாள்.

இதற்குள் அந்தப்புரத்தில் செய்தி பரவியது. பாண்டிய ராஜகுமாரி சினந்தாள். "ஒரு புலவருக்கு இத்தனை உடம்பகையா?" என கொதித்தாள். புகழேந்திக்கு ஏற்பட்ட அவமானம் தனக்கே பட்டதாகவே எண்ணி வேதனையுற்றாள்.

"கதவைச் சாத்தித் தாளிடுங்கள். என்னைக் கேட்காமல் கதவு திறக்கக் கூடாது" என்று ஆணித்தரமாக உத்தரவிட்டாள். இசை, நடனம் எல்லாம் நிறுத்தப்பட்டது.

மன்னன் வந்து கதவைத் தட்டி கை ஓய்ந்து போனான். கெஞ்சிப் பார்த்தான். எதற்கும் பதிலில்லை! மன்னன் அரண்மனைக்குத் திரும்பிவிட்டான்.



சோறாவியின் துணை நீர் இரும்பைக்கூட சேர்க்கும் தன்மை யுடையது.

மறுநாள் காலை. "கூத்தரே! என் தேவியின் கோபநெருப்பை உமது வெண்பா மழை கொண்டு அணைக்க வேண்டும்" என்று கேட்டான்.

கூத்தர் "கோபத்துக்குக் காரணமே நான்தான்" என்பதை அறியாமல் அந்தப்புரம் சென்றார்.

"ஈழத்திலும், இலங்கையிலும், கபாடபுரத்திலும், கலியாணபுரத்திலும் இருக்கும் வீரனது மார்பு என்னும் கபாடக் கதவுகளைத் திறந்த மன்னன் அந்தப்புரக் கதவருகில் நிற்கிறான். மனம் இரங்கித் தாள் திறக்க வேண்டும்" என்று பாடினார்.

"யார் பாடுவது?" என்று கேட்டாள் அரசி. சன்னல் வழியே எட்டிப் பார்த்து "நமது புலவரைச் சிறையிலிட்ட ஒட்டக் கூத்தர்" என்றாள் தோழி.

"இன்னொரு தாழ்ப்பாளையும் போடு" என்று இரைந்தது கூத்தருக்குக் கேட்டது.

"ஓ! நாம் பாடியது மழையல்ல! எரியும் சினத் தீக்கு காற்றாகி விட்டோம்" என்று புரிந்துகொண்டார்.

கூத்தர் அரசனிடம் சென்று "புகழேந்தியின் விடுதலையே அந்தப்புரக் கதவைத் திறக்க வைக்கும்" என்று சொன்னார். புகழேந்தியை விடுவித்தான் குலோத்துங்கன்.

புகழேந்தி கதவருகில் வந்து "சோழனுக்கே கோட்டைக் கதவைத் திறந்து வைத்தார் சிவனார். தலைக்கு வகிடு அழகு! முகத்துக்கு விழிகளும், காதுகளும் அழகு. பெண்களுக்கு இரட்டைச் சடை அழகு. கணவன் மனைவி பிரிந்திருப்பது அழகல்ல! உன்னைப் போல உயர் குலத்து நங்கை கணவனைக் கூடுவது அழகல்லவா!" என்று பாடினார். அது எட்டுமோ?

"குலோத்துங்கன் வாசல் வந்தால் தானே திறக்கும் நின் கைம் மலரிய தாளையே!" என்று முடித்தார்.

அரசி மகிழ்ந்து மனம் இளகினாள். கோபம் பஞ்சாய்ப் பறந்தது. தாள் நீக்க உத்தரவிட்டாள்.

'ஒட்டக்கூத்தர் பாடலுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' போட்டதாக பணிப் பெண்கள் மூலமாக நாடெல்லாம் செய்தி பறந்தது. ●




# பிரதிபலிக்கும்

கட்டுரை



ஓர் ஒளிக் கதிர் கண்ணாடியில் மோதும்போது, அது பிரதிபலிக்கிறது. அதாவது சுவரின் மீது வீசி எறிந்த பந்து போல, அதே வேகத்தில் திரும்பி வருகிறது. பளபளப்பான, வழவழப்பான, பொருளின் மீது மட்டுமல்ல, எந்தப் பொருளின் மீது படும் ஒளியும் பிரதிபலிக்கவே செய்கிறது. ஆனால் பளபளப்பான, வழுவழுப்பான பொருளின் மீது ஒளிபட்டால், அது பிரதிபலிப்பதை, ஒளிப் பரவல் மூலம் தெரிந்து கொள்கிறோம். அதுவே சொரசொரப்பான பொருட்களின் மீது ஒளி விழுந்தால், அவ்வொளி சிதறடிக்கப்படுகிறது, பிரதிபலிக்கப்படுவதில்லை. கல் மீது விழும் ஒளியையும், கண்ணாடி மீது விழும் ஒளியையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஆனால் எல்லாப் பொருட்களுமே குறைந்த அளவு ஒளியையாவது பிரதிபலிக்கின்றன. இல்லையெனில் அப்பொருட்களை நாம் பார்க்கவே முடியாது.




ஓர் இடத்தில் தேங்கிக் கிடக்கும் தெளிவான நீரின் மீது படும் ஒளியும், கண்ணாடியின் மீது படுவது போலவே பிரதிபலிக்கிறது. அதில் தெளிவான பிம்பம் தெரிகிறது; ஒளி வரும் திசையும், ஒளியும் தெரிகிறது. அந்த நீரினை காற்று அசைத்தால், ஒளி உருவம் சிதைந்து விடுகிறது. அதன் மீது விழும் ஒளிக்கற்றைகள் பல்வேறு திசைகளில் பிரதிபலித்து சிதறடிக்கப்படுகின்றன. நீரில் தெளிவான உருவமின்றி, சிதறிய ஒளியே குதிக்கிறது. இப்படி நீரின்



# ஒளி!

மோகனா


மீதுபடும் ஒளி பிரதிபலிப் பதைப் பார்த்து, பழங்கால கிரேக்க கணிதமேதை யூக்ளிட் என்பவர், ஒளி எவ்வாறு சிதறுகிறது என்பதைப் புரிந்து கொண்டார். கி.மு. 300 வரையிலும்கூட, யூக்ளிட் ஒளி பிரதிபலிப்பு பற்றி கூறியதையே மற்ற கிரேக்க விஞ்ஞானிகளும் பின்பற்றினர். ஆனால் கி.பி 1100க்குப் பின் கதையே மாறிவிட்டது. அரே பிய விஞ்ஞானி அல்ஹேசன் என்பவர், ஒளிபிரதிபலிப்பின் கொள்கையை உருவாக்கினார். இதில் இவர், ஒளி ஒரு பரப்பில் மோதும்போதும், பின் பிரதி பலிக்கும்போதும் என்ன நிகழ்கிறது என்பதைத் தெளிவாக்கினார்.



ஆதி காலத்தில், தெளிவான, கலங்காத தேங்கிய நீர் நிலைதான், இயற்கை முகம் பார்க்கும் கண்ணாடியாகப் பயன் பட்டது. கிரேக்கப் புரா ணத்தின்படி 'நார்சிஸஸ்' என்ற இளைஞன், தன் உருவத்தைத் தண்ணீரில் பார்த்துவிட்டு, தன் அழகில் தானே மயங்கினான். முதலில் தன் முகம் எப்படி இருக்கும் என் பதே அவனுக் குத் தெரியாது. நீரில் தெரிவது வேறு ஒருவரின் உருவம் என நினைத்து, அதனைப் பிடிக்க கிணற்றுக்குள் குதித்து நீரில் மூழ்கி இறந்துவிட்டான்.

கி.மு. 1300களில் எகிப் தில், வெண்கலத்தால் செய் யப்பட்டது கண்ணாடி. (இப்போதுங்கூட பழைமையான வெள்ளி தட்டு, டம்ளர், வெண்கல கிண்ணம் போன்றவற் றில் நம் உருவப் பிரதி பலிப்பைக் காண்கிறோமே!)





பிரதிபலிப்பு இரண்டு வகை ஒளிக் கதிர்கள் மூலம் நிகழ்கின்றன. ஒன்று உள்வரும் கதிர் மற்றொன்று, வெளியேறும் கதிர். பிரதிபலித்தல் விதிப்படி இரண்டு கதிர்களும் ஒரே கோணத்தில் உள்ளன. ஒரு பொருள் கண்ணாடியினூடே தெரிகிறது

என்றால், அதன்மீது பிரதிபலிக்கப்பட்ட ஒளியைத்தான் கண் பார்க்கிறது என்று பொருளாகும்.

இணையான ஒளிக்கதிர்கள் குழி ஆடியை அடையும்போது பிரதிபலிக்கப் படும் ஒளிக்கதிர்கள் உள்நோக்கி கவிழ் கின்றன. பின் ஓரிடத்தில் சங்கமிக்கின்றன. பொருளிலிருந்து ஒளி எவ்வளவு தூரத்தில் காணப்படுகிறது என்பதைப் பொறுத்தே ஒளியின் பிரதிபலிக்கும் தன்மை உள்ளது. பளபளப்பான ஒரு கரண்டியின் அல்லது ஸ்பூனின் உட்புறம் நீங்கள் பார்த்தால், உங்கள் முகம் அதில் பிரதிபலிக்கப்பட்டு தலைகீழாகத் தெரியும். கரண்டியைத் தூரத்தில் வைத்து முகம் பார்த்தால் உருவம் சிறிதாகிவிடும்.

குவிந்த கண்ணாடி வெளிப் பக்கமாய் வளைந்திருக்கும். இணை கோடுகளாய் வரும் ஒளிக்கதிர்கள், குவி ஆடியின் மேல்படும்போது, அவை பிரதிபலிக்கப்பட்டு விரிந்து செல்கின்றன. குவி ஆடியில் பிம் பத்தைப் பார்க்கும் ஒருவரின் மூளை, அப் பிம்பம் ஆடிக்குள் (பின்புறமிருந்து) இருந்து வருவது போல் தோற்றமளிக்கும். ஒரு பொருளின் நேரான மாயத் தோற்றமே. குவி ஆடியில் பிரதிபலிக்கிறது. குவி ஆடி பரந்துபட்ட பிம்பத்தை மிகச் சிறியதாக ஆக்கி ஆடிக்குள் காண்பிக்கிறது. எனவே, கார், பஸ், லாரிகளின் ஓட்டுநர் அருகிலுள்ள குவி ஆடி அவற்றின் பின்னாலிருந்து வரும் பொருட்கள், கார், மனிதர்கள் போன்றவற் றைத் தெளிவாக, சிறிதாக காட்டும். ஆனால் அவை மிக தூரத்தில் தெரிவது போல் இருந்தாலும், அருகிலேயே வந்து கொண் டிருக்கின்றன என்பதை ஓட்டுநர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.

முன் பக்கத்தில் காணப்படும் வண்ணத் துப் பூச்சியின் தோற்றம் வித்தியாசமாகவும், பக்கவாட்டில் நீண்டும் காணப்படுகிறது. இது உருளை வடிவ கண்ணாடியின் மீது பிரதிபலிக்கப்படும்போது ஏற்படுகிறது.

பட்டை தீட்டப்பட்ட வைரம், அதன் மேல் படும் ஒளியைப் பல்வேறு திசை களிலும் பிரதிபலிப்பதால்தான், வைரம் ஜொலிக்கிறது. சில ஒளிக்கதிர்கள் வைரத்தின் மேல் பகுதியிலிருந்தும், சில உள் பகுதியிலிருந்தும் பிரதிபலிக்கின்றன. வைரத்தை அடிப்பகுதியிலிருந்து பார்த் தால், அது வெறும் கண்ணாடி போலவே தெரியும். எந்தப் பிரதிபலிப்பும் ஜொலிப்பும் காணப்படாது. ஜொலிப்பு பட்டை தீட்டிய தால்தான். பட்டை தீட்டப்படாத இயற்கை யில் எடுத்த வைரத்திற்கு மதிப்பே இல்லை.



மீன்கள் கண்களைத் திறந்து கொண்டு தான் தூங்கும். ஏனெனில் மீன் களுக்கு இமை கிடையாது.

தட்டைக் கண்ணாடியில் படும் இணை கோடுகளான ஒளி, எவ்வித மாற்றத்திற்கும் உள்ளாகாமல், அப் படியே பிரதிபலிக்கிறது. ஆனால் 'இட வல மாற்றம்' ஏற்படும். நீங் கள் உங்கள் வீட்டில் தினமும் உங்கள் உருவத்தைக் கண் ணாடியில் பார்க்கிறீர்களே! அது 'இடவல மாற்ற உருவம்'தானே! காவல் துறை வாகனங்கள், ஆம்புலன்ஸ் போன்ற வற்றில் இவ்வகை கண் ணாடிகளே ஓட்டுநரின் அருகில் வைக்கப்பட் டுள்ளன.



# லாரா போஸ்டர் அட்டகாசம்!

**கடிதங்கள்**



சேலத்திலிருந்து ஆர். அறு [illegible] தேவி "லாரா கோகுலம் அட்டையின் அழகு சுண்டியிழுக்கிறது. [illegible] வருகிறது. அட்டையைப் பார்த்ததும் பனி உலகத்துக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கு உண்டானது. அடுத்த ஆண்டு என் அப்பா அழைத்துச் செல்வதாகக் கூறியிருக்கிறார். புது இடத்தை அறிமுகப்படுத்திய கோகுலத்துக்கு நன்றி" என்கிறார்.

[illegible] வைத்துவிட்டன. புதையல் தீவு தொடர் கதை செம விறுவிறுப்பாக இருக்கிறது. ஆசிரியர்களைப் பற்றி மாணவர்கள் கூறியிருந்தது உண்மையில் ரொம்ப நெகிழ்ச்சியாக இருந்தது" என்கிறார்.

"நடுப்பக்கத்தில் லாரா போஸ்டர் அட்டகாசமாக இருந்தது. சுவரில் ஒட்ட மனமின்றி, ஃபிரேம் போட்டு விட்டேன். தேனாட்டம் பற்றிய துணுக்குகள் ஆச்சரியத்தைத் தந்தன" என்கிறார் மதுரவாயிலிலிருந்து மு. ஆதிசேஷன்.




"அசைவைத்த சோதனை, [illegible] குழந்தைக்குக் கிடைத்த பரிசு, [illegible] தந்த பரிசு போன்ற கதைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. மரங்களின் சேவையை மதித்தால் சேவையாக நினைக்கும் ஜக்குவின் கட்சி தான் நானும். ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற படங்கள் ஒவ்வொன்றும் அருமையாக இருந்தன" என்கிறார் நாகப்பட்டினத்திலிருந்து ஆர். [illegible].

ஜோ [illegible] லார்பேட்டையிலிருந்து [illegible] "ஜோக்ஸ் [illegible] அனைத்து ஜோக்குகளும் பயங்கர சிரிப்பை [illegible]

பாளையங்கோட்டையிலிருந்து [illegible] "நெட் மீடியா நான் மிகவும் விரும்பிப் படிக்கும் பகுதி. [illegible] சுவாரசியமான செய்தியாக இருந்தது. கோகுலம் இந்தச் செய்தியை முதலில் தந்துவிட்டது. தொலைக்காட்சி செய்திகளில் பிறகு இதுபற்றிக் கூறினார்கள். [illegible] சிறியவர்களுக்கு [illegible] வாழ்த்துகள்" என்கிறார்.

"ஸ்ருதி, [illegible] பனி மனிதன் அட்டைப் படமும், [illegible] நான்கு படக்கதைகளும் [illegible] இருந்தன. நெட் மீடியா பகுதியில் அமெரிக்க [illegible] இந்திய [illegible] பாராட்டுக்கு உரியது" என்கிறார் திருக்குறுங்குடியிலிருந்து செ. நம்பி [illegible].

**ஓவியப் போட்டி**

இப்பக்க [illegible] கொடுத்துள்ள [illegible] பார்த்து ரசித்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: [illegible] உங்கள் [illegible] வண்ணத்தில் ஓவியம் தீட்டி அனுப்பி வையுங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 15.07.2004.

# 5 கிளித் தலை இளவரசி!

கதை : குறும்பலாப்பேரிப் பாண்டியன் படம் : கவிதா











# இரவில் பூத்த பூ!

மெல்ல மெல்ல நகரும்
வெள்ளித் தேரைப் போல
முல்லை வண்ணம் மின்னும்
உள்ளம் கொள்ளை கொள்ளும்

சுட்ட தோசை போன்ற
வட்ட வடிவ நிலவு
எட்டி இருந்த போதும்
தொட்டுத் தழுவும் ஒளியால்

உயிர்கள் தூங்கும் இரவில்
உலகைக் காவல் காக்க
உயர்ந்த வானில் தோன்றி
உலவும் விடியும் வரையில்

பரிதி சிந்தும் ஒளியை
இரவல் வாங்கும் நிலவு
இரவில் பூத்த பூப்போல
வளர்ந்து வாடும் வானில்.

---

**சி.விநாயகமூர்த்தி**

புதிர் உலகம்

# ஹோட்டலுக்குச் சென்றவர்கள் எத்தனை பேர்?

**I.** என் கையில் சில பழங்கள் உள்ளன. அவற்றில் இரண்டைத் தவிர மற்ற அனைத்தும் வாழைப்பழங்கள். இரண்டைத் தவிர மற்ற அனைத்தும் மாம்பழங்கள். இரண்டைத் தவிர மற்ற அனைத்தும் பப்பாளிப் பழங்கள். அப்படியென்றால் என்னிடம் எத்தனை வாழைப்பழங்கள், மாம்பழங்கள் மற்றும் பப்பாளிப் பழங்கள் உள்ளன?

**II.** நாம் ஒருவரிடம் 5 வாழைப் பழத் தோல்களைக் கொடுத்தால், அவன் நமக்கு ஒரு முழுப் பழத்தைத் தருவான். அப்படியென்றால், 125 வாழைப் பழத் தோல்களைக் கொண்டு, எத்தனை வாழைப்பழங்களை வாங்க முடியும்?

- ஆ. மீனா, ஒன்பதாம் வகுப்பு, அங்கப்பா மேல்நிலைப் பள்ளி, கோவை

**III.** ஒருவன் அடுத்த ஊருக்கு நடந்து செல்கிறான். திரும்பி வரும்போது சைக்கிளில் வருகிறான். அதற்கு 3 மணி 45 நிமிடம் ஆகிறது. சைக்கிளிலேயே போய் வந்தால் இரண்டரை மணி நேரமாகும். நடந்தே போய் வர அதற்கு எவ்வளவு நேரமாகும்?

- என். ஜுனைபாலு, திருப்பட்டினம்

**IV.** இந்த பெட்டியில் இருக்கும் ஊர் மற்றும் அதைச் சுற்றி புள்ள 6 முக்கிய ஊர்கள் உள்ளன. கட்டங்களுக்குள் ஒவ்வொரு எழுத்தாகச் சிதறிக் கிடக்கின்றன. முதலில் இந்த 7 ஊர்களையும் கண்டுபிடித்து நீக்கி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ர | கோ | க் | டு | ட் | ப | க் |
| தி | ட் | டை | பா | ழு | ச | ம |
| கு | வி | லை | கு | தி | நா | கு |
| தா | டை | ஆ | ல் | ஞ் | ப | ங் |
| பே | ம் | ம் | சா | த | பா | ணி |
| ர | ண | கோ | ப | ம் | கு | ர் |
| டு | தா | ர் | க | ர் | ஆ | கா |

விடுங்கள். இப்போது சில எழுத்துகள் மிஞ்சியிருக்கும். அந்த எழுத்துகளை மட்டும் தனியே எடுத்து ஒழுங்குபடுத்துங்கள். கோதுமை தொடர்பான ஓர் ஊர் கிடைக்கும். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?

- ச. கார்த்திகா, பன்னிரண்டாம் வகுப்பு, ஆக்ஸிலியம் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்



**V.** மூன்று இலக்க எண் ஒன்றை எழுதிக் கொள். '0' கூடாது. முதல் இலக்கத்திற்கும் மூன்றாம் இலக்க எண்ணிற்கும் 2க்கு மேல் கூடுதல் இருக்க வேண்டும்.

உதாரணமாக - 321 என்ற எண்ணைத் திருப்பிப் போடு (123). பின் அதைக் கழி (321-123= 198).

கழிபடவும் வந்த எண்ணைத் திருப்பிப் போட்டுக் கூட்டு (198+891=1089).

இது போல மூன்று இலக்க எண்ணை எழுதி திருப்பிப் போட்டு கழித்து மீண்டும் அந்த எண்ணை திருப்பிப் போட்டுக் கூட்டினால் எல்லா கணக்குகளுக்கும் விடை 1089தான் வரும். திருப்பிப் போடும் எண் சிறியதாக இருந்தால் கீழே போடவும். பெரிய எண்ணாக இருந்தால் மேலே போட்டுக் கழிக்கவும்.

- க. கண்மணி, திட்டுக்

**VI.** ஹோட்டலுக்குச் சில மாணவர்கள் சென்றனர். சென்ற மாணவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் தோசை சாப்பிட்டனர். ஒரு பங்கினர் இட்லி சாப்பிட்டனர். இந்த இரு பகுதியினர் எண்ணிக்கையைப் போல் மூன்று மடங்கு மாணவர்கள் சப்பாத்தி சாப்பிட்டனர். மீதமிருந்த ஒரு மாணவன் மட்டும் ஒன்றும் சாப்பிடாமல் நின்றிருந்தான். அப்படியானால் ஹோட்டலுக்குச் சென்ற மாணவர்கள் எத்தனை பேர்?

- ஆர். பிரசன்னா, கரூர்

**VII.**

| | |
|---|---|
| தமிழகத்தின் நெற்களஞ்சியம் | தஞ்சாவூர் |
| வங்காளத்தின் துயரம் | தாமோதர் நதி |
| தென்னுலக பிரிட்டன் | நியூசிலாந்து |
| பொற்கதவு நகரம் | சான்பிரான்சிஸ்கோ |
| பொற்கோயில் நகரம் | அமிர்தசரஸ் |
| கலை கோபுர நகரம் | ஆக்ஸ்போர்டு |
| அரண்மனை நகரம் | கொல்கத்தா |
| ஏழு குன்றுகளின் நகரம் | ரோம் |
| ஐரோப்பாவின் போர்க்களம் | பெல்ஜியம் |
| வானளாவிய கட்டட நகரம் | நியூயார்க் |

- ச. அருண்குமார், ஒன்பதாம் வகுப்பு, மேல்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்



## விடைகள்

**I.** எல்லா வகையிலும் ஒவ்வொன்று உண்டு.

**II.** 25 பழங்கள் கிடைக்கும். அவற்றின் தோல்களைக் கொடுக்க 5 பழங்கள் கிடைக்கும். 5 பழங்களின் தோல்களைக் கொடுத்து இன்னொரு பழம் வாங்கலாம். மொத்தம் 25+5+1=31 பழங்கள்

**III.** 5 மணி நேரம்

**IV.** 1. தஞ்சாவூர். 2. திருவையாறு. 3. பாபநாசம். 4. கும்பகோணம். 5. பட்டுக்கோட்டை. 6. திருவிடைமருதூர். 7. பேராவூரணி
[illegible]

**VI.** 25 மாணவர்களில் தோசை
5 பேர், இட்லி 1 ஆள்,
சப்பாத்தி 18 பேர்,
மீதம் 1 மாணவன்




## கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ______________________________

முகவரி : ______________________________

______________________________

______________________________

ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.



# யார்



"ஏன் இல்லாமல்? ஒரு சோதனை செய்து பார்த்து விடலாமா? ஆனால் இது பற்றி எவரிடமும் வாய் திறக்கக் கூடாது. நம் அமைச்சர்களில் துரந்தர் எப்படி?" என்று கொக்கிவிட்டார் குணாளன்.

"உள்ளளவு இல்லாவிட்டாலும் புத்திசாலிதான்! எத்தனை யோசனைகள் சொல்லியிருக்கிறார்!" என்றார் வேந்தர்.

"ஒப்புக் கொள்கிறேன். அவரை விட மேதாவி ஒருவரை மக்களிலிருந்து அடையாளம் காட்டட்டுமா?" என்று சவாலாகக் கேட்டார் மந்திரி.

கும்பசேனன் வியப்போடு ஒப்புக் கொண்டார்.

"அரசே! பலகாரக் கடை வைத்திருக்கும் பலராமனை அழைத்து வரச் சொல்லுங்கள்" என்றார் அமைச்சர்.

சிம்மபுரத்தை ஆண்ட அரசர் கும்பசேனன். அவருடைய மந்திரிகளிலே அறிவு நிறைந்தவர் குணாளன். அதனால் அரசனுக்குக் குணாளனிடம் பிரியம் அதிகம். மற்ற மந்திரிகளுக்கு இது பொறாமையைத் தந்தது. அதிலும் துரந்தர் அவரைக் கவிழ்க்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்தார். இதைக் குணாளனும் அறிவார்.

ஒருநாள் மன்னர் "குணாளா! நம் சபையில் உள்ளவர்களைவிட அறிவாளிகள் நாட்டில் உண்டா?" என்று கேட்டார்.

"பலராமனா? எழுத்து வாசனையே கிடையாதே" என்று ஆச்சரியப்பட்டார் மன்னர்.

"படிப்புக்கும், அறிவுக்கும் சம்பந்தமில்லை! பலராமிடமும், துரந்தரிடமும் நான்தான் பேசுவேன். நீங்கள் குறுக்கிட்டால் காரியம் கெட்டுவிடும்" என்று நிபந்தனை விதித்தார் அமைச்சர்.

முதலில் மந்திரியை அழைத்து வரச்

# புத்திசாலி?

மாலதி

செய்தார் குணாளன். துரந்தரர் வந்ததும் குணாளன் அவரிடம், "நண்பரே! முன்னர் இளவரசருக்கு உடல் நலம் சரியில்லாமல் இருந்ததல்லவா? அப்போது இளவரசர் குணமானால் திருப்பதிக்கு முடி காணிக்கை தருவதாக வேண்டிக் கொண்டேன். இளவரசர் முடியை இழக்க மறுக்கிறார். அவருக்குப் பதில் எவராவது முடி காணிக்கை செலுத்தலாம். அரசர் அன்னை பவானிக்கு முடி தருவதாக நேர்ந்து கொண்டிருக்கிறார். நான் தரலாமென்றால் என் தாயார் இறந்து ஒரு வருடம் ஆகவில்லை! இப்போது முடி தந்தால் தெய்வம் ஏற்காது. உங்கள் ஞாபகம் வந்தது. உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால்..." குணாளன் முடிப்பதற்குள்,

"எனக்கென்ன மறுப்பு? இளவரசருக்காக முடியிறக்கப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். எங்கே எப்போது தர வேண்டும்?" என்று பரபரப்பானார் துரந்தரர்.

மன்னரின் அபிமானத்தைப் பெற இது சரியான சந்தர்ப்பம் என்று நினைத்தார். விடுவாரா?

"அமைதி, அமைதி. நாவிதரை அழைத்து வரச் சொல்லியிருக்கிறேன். இங்கேயே கொடுத்து விடுங்கள். அரசர் குடும்பத்தோடு போய் வேண்டுதலை நிறைவேற்றி விடுவார். உங்களுக்கு அதற்காக எவ்வளவு பணம் வேண்டும்?" என்று கேட்டார் குணாளன்.

"அபசாரம், அபசாரம்! தெய்வ காணிக்கைக்குப் பணம் கேட்கலாமா?" என்று துரந்தரர் பதற,

"விலை கொடுக்காவிட்டால் வேண்டுதலை தெய்வம் ஒப்புக் கொள்ளாது. ஏதாவதொரு தொகை சொல்லுங்கள்" என்றார் துரந்தரர்.

மன்னர் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்படியா, சரி. ஐம்பது ரூபாய் கொடுங்கள்" என்றார் துரந்தரர். நாவிதரும் வந்து விட்டார். சந்தோஷமாய் முடியிறக்கிக் கொண்டு ஐம்பது ரூபாய் பெற்று மன்னரை வணங்கிச் சென்றார் துரந்தரர்.



கும்பிளாளுக்கு எதுவும் புரியவில்லை. ஆயினும் மௌனமாக இருந்தார். அடுத்து காத்திருந்த பலராமன் அழைக்கப்பட்டார். நாந்தாரிடம் கூறியதை அவரிடமும் கூறினார் குணாளன்.

பலராமனும் சந்தோஷமாய் சம்மதித்தான்.

"உனக்கு அதற்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டார் மந்திரி.

"ஐயாவே! தகப்பனார் இறந்தபோது முடியிறக்கினேன். ஐயாயிரம் செலவாச்சு. அம்மா இறந்தபோது மொட்டை போட்டுக் கொண்டேன். அதுக்கு ஐயாயிரம். அப்புறம் பிரார்த்தனைக்கென்று பழனி, திருப்பதி, குருவாயூர் ஒவ்வொன்றிலும் குடும்பத்தோடு போய் முடி இறக்க மொத்தமாகப் பத்தாயிரம் செலவு பண்ணியிருக்கேன். இது ராஜா மகனுக்காகப் போட்டுக்கற மொட்டை. இதுக்குத் தட்சிணை தரமாட்டீங்க! இருபத்தஞ்சாயிரம் தந்தா சந்தோஷப் படுவேன்" என்றான்.


இருபதாயிரம் கொடுத்தார் மந்திரி. நாவிதர் அழைக்கப்பட்டார்.


நாவிதர் தலையில் தண்ணீர் தெளிக்கவும், பலராமன் கோபமாக, "இது சுத்தமான நீரா? ராஜா மகனுடைய முடியாக்கும் இது! கண்டபடி பிடிச்சிருக்காதே! உடம்புதான் பலராமன், முடி ராஜகுமாரனோடதாக்கும்! கத்தியை நல்லா சாணை பிடிச்சிருக்கியா? இது சாமிக்கு அடிக்கிற மொட்டையில்லே! பிரார்த்தனை முடியாக்கும்" என்று அதிகாரமாய் பேச, மன்னரின் பொறுமை எல்லை கடந்தது. "குணாளா! இந்த முட்டாளை முதலில் விரட்டு. இது என்ன பித்துக்குளித்தனமான சோதனை" என்று எரிந்து விழுந்தார்.

நாவிதர், பலராமன் இருவருமே ஓடிப்போனார்கள். அவர்கள் சென்ற பிறகு, "அரசே! இருபதாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு முடியைக் கொடுக்காமல் போன பலராமன் புத்திசாலியா? ஐம்பது ரூபாய்க்கு முடியை இழந்த நாந்தான் புத்திசாலியா?" என்று கேட்டார் குணாளன்.

பலராமன் பணத்தைத் திருப்பித் தர முன் வந்தபோது, "எடுத்துக் கொண்டு தொலை" என்று எரிந்து விழுந்தவரிடத்தே மன்னர்! என்ன பேச முடியும்?

## குறுக்கெழுத்துப் புதிர் விடை





# "பயந்து ஓடி வந்தேன்!"

## பிரபலங்களின் வாழ்வில்...



• பெர்னாட் ஷா



• விஸ்வேஸ்வரய்யா

ரமணருக்கும் பாலப் பருவத்தில் பாடம் நடத்திய ஆசிரியர் ஒருவர் ரமணர் பகவானாக அறியப்பட்டபின் ஆசிரமத்துக்கு வந்தார். அந்நாள் சிறுவனை ஆதி மகானுருவாக உணர்ந்து ஆன்மிக விளக்கங்களை அவரிடம் கேட்டார் ஆசிரியர்.

உடனே ரமணர், "பள்ளியில் நீங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பயந்து தான் ஓடி வந்தேன். இங்கும் கேள்வி கேட்க வந்துவிட்டீர்களே!" என்று சிரித்தார்.

- தெ. இராமன், சென்னை

### பொருந்தாத சட்டை!

மூதறிஞர் ராஜாஜியைப் பார்த்து ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார் : "சென்ற ஆண்டு ஆதரித்த கட்சியை இந்த ஆண்டு அகற்ற எண்ணியது ஏன்? தங்களுக்கு ஒரு நிலையான கொள்கை இல்லையென்று ஆகிவிடாதா?". இதற்கு ராஜாஜி சொன்ன பதில் : "சென்ற ஆண்டு வரை எனக்குப் பொருத்தமாயிருந்த சட்டை, இந்த ஆண்டு சின்னதாகக் குறுகி விட்டதால், நான் புதுச்சட்டை தைத்துக் கொண்டேன். இதிலென்ன தப்பு?" என்றார்!

- கே. எஸ். சுந்தரமூர்த்தி, கோபிகிருஷ்ணாபுதூர்

### முயன்றால் முடியும்!

"நான் இளைஞனாக இருந்தபோது பத்துக் காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது காரியங்கள் தோல்வி அடைவதைப் பார்த்தேன். என் வாழ்க்கையில் தோல்வியடைவதை நான் விரும்பவில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற நான் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தபோது எனக்கு ஓர் உண்மை புலப்பட்டது. தொண்ணூறு முறை முயற்சி செய்தால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே என் முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன். நான் எதிர்பார்த்த வெற்றி கிட்டியது" என்றார் பெர்னாட் ஷா.

- தெ. சு. மகாலிங்கம், பாண்டிச்சேரி

• ரமணர்



### சொந்தக் காலில்...

விஸ்வேஸ்வரய்யா ஒரு விழாவுக்குச் சென்றிருந்தார். அப்போது அவருடைய வயது தொண்ணூற்று எட்டு. விஸ்வேஸ்வரய்யாவின் வயது முதிர்ச்சியை முன்னிட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவர் அவர் பேச எழுந்தபோது அருகில் சென்றார். அவரிடம் மெல்லிய குரலில், "ஐயா, நீங்கள் நின்று கொண்டுதான் இந்த விழாவில் உரையாற்ற வேண்டும்

என்ற கட்டாயம் இல்லை. அமர்ந்து கொண்டே உரையாற்றுங்கள். அதற்குத் தக்கபடி நான் ஓவியங்களைச் சரி செய்து விடுகிறேன்" என்றார். இதைக் கேட்ட விஸ்வேஸ்வரய்யா புன்முறுவல் பூத்தார். "சகோதரரே, நீங்கள் என்ன காரணத்தினால் இப்படி சொல்லுகிறீர்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்! என்னுடைய கைகளும், கால்களும் இன்னமும் நன்றாகத் தான் இருக்கின்றன. நீங்கள் நினைப்பது போல ஓய்ந்து போய் விடவில்லை. அப்படி ஒரு நிலை ஏற்படும்போது நீங்கள் கூறியதைப் பற்றி பரிசீலிப்பேன். அதற்குள் நீங்கள் என்னை அதிக வயதாகி மூலையில் உட்கார வைத்து விடாதீர்கள். என் கை, கால்கள் உறுதியாக இருக்கும்வரை நான் என் சொந்தக் கால்களில் நிற்கவே விரும்புகிறேன். நீங்கள் பயப்பட வேண்டாம்" என்று கூறினார்.

- எஸ். துர்கா கார்த்யாயனி, தூத்துக்குடி



• ராஜாஜி

## வெற்றிக்குக் காரணம்?

உலகத்தையே வென்ற மாவீரன் அலெக்சாண்டர் தன் நாடாகிய கிரேக்கத்திற்குத் திரும்பினார்.

அவரைச் சந்தித்த அறிஞர் ஒருவர் "மாவீரரே! உங்களுக்கு முன்பு இருந்த பல அரசர்கள் உங்களைவிட சிறந்த வலிமை வாய்ந்தவர்களாகவும் பல மடங்கு செல்வம் நிறைந்தவர்களாகவும் இருந்து இருக்கிறார்கள். அவர்கள் யாராலும் உங்களைப் போல் பல நாடுகளை வெற்றி கொள்ள முடியவில்லை. உங்களால் மட்டும் எப்படி வெற்றி அடைய முடிந்தது?" என்று கேட்டார்.

"அறிஞரே! ஆண்டவன் அருளால் எனக்கு இந்தளவு வெற்றி கிடைத்தது. நான் வென்ற நாடுகளில் மக்களுக்கு முந்தைய ஆட்சியைவிட நிறைய வசதிகள் செய்து தந்தேன். அந்தந்த நாடுகளின் அரசர்களை அவர்கள் தோற்றபோதிலும் உரிமையோடும் சிறப்போடும் நடத்தினேன். அவர்கள் மதிப்பிற்கு எந்தக் குறையும் செய்யவில்லை. என் வெற்றிக்கு இவையே காரணம்" என்றார் அலெக்சாண்டர்.



• அலெக்சாண்டர்

- அ. ராஜராஜன், கம்பம்




## சுழல் கோப்பை

உங்களுக்கு கோகுலம் சுழல் கோப்பை நினைவிருக்கிறதா? கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். 2004ஆம் ஆண்டு சுழல் கோப்பையை உங்கள் பள்ளி பெற வேண்டுமானால் இப்பொழுதே கோகுலத்துக்குப் படைப்புகளை அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் 5 மாதங்களே உள்ளன.



# பாம்பு பழி வாங்குமா?




## அன்புள்ள ஜக்கு...

• கே. புஷ்பா, ராசிபுரம்

? நண்பகலில் வெப்பம் அதிகமாக இருப்பது ஏன் ஜக்கு?


வெயிலின் கொடுமை தாங்கலையா புஷ்பா? சூரியனின் கதிர்கள் காலை, மாலை வேளைகளில் சாய்வாகவும், நண்பகலில் செங்குத்தாகவும் விழுகின்றன. செங்குத்தாக விழும் கதிர்கள் வெப்பத்தை அதிகமாகத் தருகின்றன. அதனால்தான் நண்பகலில் வெப்பம் நம்மை வாட்டி விடுகிறது.



• எஸ். ராஜீவ், அறந்தாங்கி

? அமெரிக்க அதிபரின் இருப்பிடத்தை வெள்ளை மாளிகை என்று ஏன் அழைக்கிறார்கள் ஜக்கு?

1814ஆம் ஆண்டு இந்தக் கட்டடத்தில் தீ விபத்து ஏற்பட்டது. சுவர்கள் எல்லாம் கருப்பாகி விட்டன. பிறகு வெள்ளை நிற பெயிண்ட் அடிக்கப்பட்டது. அதன்பிறகு இந்த மாளிகையை 'வெள்ளை மாளிகை' என அழைக்க ஆரம்பித்துவிட்டனர்.



• வெள்ளை மாளிகை

• எஸ். ஸ்ரீ. பிரணவ், போரூர்

? ஒலியை எப்படி நம்மால் கேட்க முடிகிறது ஜக்கு?

ஒலி காற்றின் மூலமே பரவுகிறது. காற்று இல்லா விட்டால் நம்மால் ஒலியைக் கேட்க முடியாது. சந்திரனுக்குப் போய் நீங்கள் சத்தமாக இந்தக் கேள்வியைக் கேட்டால் அது என் காதை அடையாது பிரணவ்.



• குற்றாலம்



ஒரு நாய் இறால் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் முட்டைகள் இடும்.

● என். மகேஸ்வரி, விக்கிரமசிங்கபுரம்

? அடிபட்ட பாம்பு எவ்வளவு காலம் ஆனாலும் அடித்தவர்களைக் கடிக்காமல் விடாது என்கிறார்களே, உண்மையா ஜக்கு?

பாம்பை அடிக்கும்போது, அது தன்னைக் காத்துக் கொள்ள கடிக்க வரும். ஆனால் அடிவாங்கிக் கொண்டு சென்று விட்டு, சமயம் வரும்போது அடித்தவனைத் தேடி வந்து கடிக்கும் என்பதெல்லாம் கட்டுக் கதை. பாம்புக்கு அடித்தவனை நினைவில் வைத்து, பழிவாங்கக் கூடிய அறிவு எல்லாம் கிடையாது. பொதுவாக எந்தப் பிராணியும் உங்களுக்குத் தொந்தரவு செய்யாதவரை, அதற்கு நீங்கள் தொல்லை தராமல் இருக்க வேண்டும் என்பது என் கருத்து மகேஸ்வரி.

● வி. லோகநாதன், திருநள்ளாறு

? ஜக்கு, உனக்கு குற்றால மலை என்றால் பிடிக்கும்தானே! அதற்கு என்ன காரணம் என்று கொஞ்சம் சொல்லேன்.

குற்றால மலை என்று இல்லை. எந்த மலையாக இருந்தாலும் அதன் அழகு எனக்கு மட்டுமின்றி, உங்களுக்கும் பிடிக்கும் என்று நினைக்கிறேன். குற்றாலத்தில் குரங்குகளைப் பார்த்துவிட்டு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள் லோகநாதன். மலையும், காடும் நிறைந்த இடங்கள்தானே பிராணிகளின் வசிப்பிடங்கள். அங்கு குரங்குகள் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. அவர்கள் இடத்துக்கு நீங்கள் செல்வதுதான் ஆச்சரியமான விஷயம்.

● ஜோதி, மாங்காடு

? ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய சார்பாக உன்னை அனுப்பலாமா ஜக்கு?

நூறு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நம் நாட்டில் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள நிறையப் பேர் இருக்கிறார்கள். இந்திய தடகள அணியும், கர்ணம் மல்லேஸ்வரி போன்றவர்களும் நிச்சயம் பதக்கத்துடன் வருவார்கள். கவலைப்படாதீர்கள் ஜோதி.

## 1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!

மே இதழில் வெளி வந்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சரியான விடை : 1. எங்கள் அல்லது யாங்கள் 2. மாண்டலே 3. பர்மிய 4. கிடைட் 5. தேக்கு 6. ஜப்பான்

யாருக்குப் பரிசு?

1. ம. சந்திரநாத், நாவலர் வழுவு, சிவகாசி அரிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புதுவீடோண்டான் காலனி, சிவகாசி.

2. ச. கீர்த்தனா, கோடம்பாக்கம், சென்னை.

3. எ. சவிதா, மூன்றாம் வகுப்பு, கோவிந்தபுரம், திருவாரூர் மாவட்டம்.

4. ஆஷா, பதினோராம் வகுப்பு, அவ்வை மகளிர் மேல்நிலைப்பள்ளி, தக்கலை.

5. வி. ஸ்ரீராம், கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

# விரும்பியதைச் செய்ய வேண்டும்!

**எங்கள் எண்ணங்கள்...**

ஒரு மாணவன் பள்ளியில் நடைபெற்ற பாட்டுப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் பார்த்துவிட்டு அன்று முதல் 'பாட்டு - பாட்டு' என இருந்தான். நாள் வாரம் இருந்தது. வேறொரு நாள் பேச்சுப் போட்டி நடைபெற்றது விருந்தான். "பாட்டுக்குப் பக்க வாத்தியங்கள் வேண்டுமே! பேசுவதற்குத் தேவையில்லையே" என்று பாட்டு நோட்டை ஓட்டைக் கட்டி, மேடையில் பேச்சாளர் மணிக்கணக்காக உரக்கப் பேசிப் பழகினான். மற்றொரு நாள் பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடந்தது. "மேடைப் பேச்சுக்கு சிறந்த தலைப்பு, குறிப்புகளெல்லாம் தேட வேண்டுமே! ஓட்டப் பந்தயத்துக்கு இவை எல்லாம் தேவையில்லையே" அவ்வளவு தான். குறிப்புகளும் பாட்டு நோட்டு சென்ற இடத்துக்கே சென்றது. காலை மாலையிலும் மைதானத்தில் பயிற்சியும் நிக்கருமாக ஓடத் தொடங்கினான். இப்படி இல்லாமல் நமக்கு எதில் ஆர்வம் இருக்கிறதோ அதை அறிந்து அதிலேயே முழு கவனத்தையும் செலுத்த வேண்டும். நிச்சயம் நாம் எழுத்தாளராகவோ, பாடகியாகவோ, வீரராகவோ மாறி விடலாம்.

- ஆர். பெருமாள், பன்னிரண்டாம் வகுப்பு, நீலாம்பாள் மேல்நிலைப் பள்ளி, சேலம்



கோடை விடுமுறையை நாம் ஒவ்வொருவரும் ஓய்வெடுக்கவும் நம்மில் பொதிந்துள்ள திறன்களை வளர்க்கவும் பயன்படுத்த வேண்டும். எதனைக் கற்றுக் கொள்ளவும் 'ஆர்வம்' அவசியம்.

'பல மரம் கண்ட தச்சன் ஒரு மரமும் வெட்டான்' என்பதை நினைவிற்கொண்டு, பெற்றோர் தம் பிள்ளைகளை 'ஆர்வமில்லாத' பல கலைகளைக் கற்றுக் கொள்ள கட்டாயப் படுத்துவதைவிட 'ஆர்வமுள்ள' ஒன்றிரண்டு கலைகளைக் கற்றுக் கொடுக்கலாம்.

- எஸ். அனிதா, திருச்சி

பிள்ளைகளை அவரவர் விரும்பும் துறைகளில் பயிற்சி பெறச் செய்வது தான் மிகச் சிறந்தது. ஏனெனில் நம் விருப்பத்திற்கு அவர்கள் பலவற்றையும் கற்று சாதனைகள் நிகழ்த்த வேண்டுமென்று கருதுவதால், அவர்கள் இரண்டுங் கெட்டான் நிலைக்குத் தள்ளப் படுகிறார்கள். இதனால் எதையும் உருப்படியாய் செய்ய முடியாமல் தவிப்பார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் கூட கேள்விக் குறியாகலாம். குறிப்பாக, ஒரு வீட்டில் கல்வியோடு உள்ள ஒருவர் விளையாட்டு மற்றும் இதர துறைகளில் ஆர்வம் காட்டாமல் இருப்பார். வேறு துறைக்கு அவரது கவனத்தை ஈர்த்து அதிலும் அவரை இறங்கச் செய்ய கட்டாய முயற்சி எடுக்கக் கூடாது. அவராக விரும்பினால், அவரை ஏன் மற்றவற்றிலும் சிறந்தவராகக் கூடாது என்று வினா எழுப்பி அவரை ஊக்கப் படுத்துவது நம் கடமை. ஆனால் ஒருவரே பல துறை வல்லுனர்களாக விளங்குவதையும் பிள்ளைகள் கவனிக்க வேண்டும். அவர் போல நாமும் பல துறை வல்லுனராக வேண்டுமென்று உறுதிபெற வேண்டும்.

- வீ. தேவி, சேலம்



# பயிர்கள்

வேதகிரி நாட்டு மன்னர் சேவ வர்மனின் முகம் கோபத்தால் தக்காளிப் பழம்போல் சிவந்திருந்தது. குறுக்கும் நெடுக்குமாகத் தன் அறையில் நடந்து கொண்டிருந்த அவர், ஏதோ ஒரு முடிவு எடுத்தவர் போல, தன் முன்னே நின்று கொண்டிருந்த மந்திரியையும் சேனாதிபதியையும் பார்த்து,

"நம் அண்டை நாடான முல்லை நாட்டு அரசர் முல்லைவேந்தன், தன் மகள் மதுரவாணியை என் மகனுக்கு கல்யாணம் செய்து தர மறுத்து விட்டார். என் மகனுக்கு என்ன குறை?" என்று குமுறினார்.

"அரசே! நம் இளவரசரை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள முல்லை வேந்தன் கொடுத்து வைக்கவில்லை என்று நினைக்கிறேன். நம் இளவரசருக்கு மதுரவாணியை விட்டால் வேறுநாட்டு இளவரசிகளா கிடைக்கமாட்டார்கள்?" மந்திரி கூறினார்.

"கட்டாயம் கிடைப்பார்கள். ஆனால் என் மகனை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்ள மறுத்ததை நான் அவமானமாகக் கருதுகிறேன். அதனால் முல்லைவேந்தனுக்குச் சரியான பாடம் புகட்டப் போகிறேன்"

மன்னர் என்ன சொல்லப் போகிறார் என்று அச்சம் கலந்த ஆர்வத்தோடு சேனாதிபதி மன்னர் முகத்தையே பார்த்தபடி நின்றார்.

"என்ன தெரியுமா? நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நான் சொன்னபடி செய்தால் அவர் கொட்டம் அடங்கும்" என்ற முன்னுரையோடு தன் திட்டத்தைக் கூற ஆரம்பித்தார்.

அந்த சமயம் தன் தந்தையின் அறைக்குள் நுழைய வந்த இளவரசர் ஆதித்யனின் காதில் மன்னர் சொன்ன திட்டம் விழுந்தது. திடுக்கிட்டார் இளவரசர்.

கிட்டத்தட்ட பதினான்கு மாதங்கள் ஓடிவிட்டன. ஏனோ அந்த ஆண்டு பருவ மழை பெய்யாததால், கதிரவன் தன் வெப்பத்தினால் பூமியின் பயிர்களை எரித்துக் கொண்டிருந்தான்.

ஏதோ கோபத்தில் தன் தந்தை தான் போட்ட திட்டத்தை இவ்வளவு உறுதியாகக் கடைபிடிப்பார் என்று இளவரசர் ஆதித்யன் சிறிதும் எண்ணவில்லை. அவர் இருக்கும் மனநிலையில் தான் எடுத்துச் சொன்னாலும் கேட்கமாட்டார் என்று ஆதித்யனுக்குத் தெரியும்.

என்ன செய்வது என்று யோசனையில் ஆழ்ந்தபோது, பளிச்சென ஒரு யோசனை மின்னல்.

தன் உயிர் நண்பன் உத்தமனிடமும்



# வாடலாமா?

த.ஜானகி

செய்தியைக் கூற அவளும் மகிழ்ந்தாள்.

"நீ சொன்னபடியே செய்து விடுவோம்" என்று நண்பனுக்கு உற்சாகமூட்டினான் உத்தமன்.

அமாவாசை கழிந்த மூன்றாம் நாள் முன்னிரவு நேரம்.

ஆதித்தன், உத்தமன், அவர்களுடன் எட்டு வீரர்கள் குதிரைமீதேறி அமர்ந்த படி நகரத்தின் வட கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் ஆனைக்கட்டை நோக்கிச் சென்றனர்.

முன்னிரவு முடிந்து பின்னிரவு தொடங்



கியது ஆதித்யனும் அவனோடு சென்றவர்கள் அனைவரும் அணைக்கட்டை அடைந்தனர். அங்கு காவல் காத்துக் கொண்டிருந்த வீரர்கள் இளவரசரைப் பார்த்து திடுக்கிட்டனர். அது மட்டும் அல்ல. "அணைக்கட்டை உடனே திறந்து விடு" என்று ஆதித்யன் போட்ட உத்தரவைக் கேட்டு அதிர்ந்து செயலிழந்து நின்றுவிட்டனர்.

"ஏன் மரம் மாதிரி நின்று கொண்டிருக்கிறீர்கள்? அணைக்கட்டைத் திறந்து விடுகிறீர்களா? இல்லை என்னுடைய ஆட்களைவிட்டுத் திறக்கட்டுமா?"

அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட அணைக்கட்டு காவல் வீரன் ஒருவன் "இளவரசே! தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள். தன் அனுமதி இல்லாமல் அணைக்கட்டை திறக்கக் கூடாது என்று நம் மன்னர் உத்தரவு போட்டிருப்பதால் நாங்கள் தங்கள் ஆணையை நிறைவேற்ற முடியாமல் இருக்கிறோம்" என்றான்.

"இது நான் எதிர்பார்த்ததுதான்" என்று கூறிய ஆதித்யன் தன் நண்பனையும் வீரர்களையும் பார்த்து கண்களாலேயே அனுமதி கொடுக்க, அனைவரும் தங்கள் வாட்களை உருவிக்கொண்டு அணைக்கட்டு காவல் வீரர்களின் மேல் பாயத் தயாராக நின்றனர். இப்படியொரு ஓர் உள்நாட்டு எதிர்ப்பை சற்றும் எதிர்பாராத அணைக்கட்டு காவல் வீரர்கள். இளவரசரை எதிர்க்க சில நொடிகள் தயக்கம் காட்டினர். இந்தத் தயக்க நொடிகளைப் பயன்படுத்திக் கொண்டு இளவரசரோடு வந்த வீரர்கள், அணைக்கட்டு வீரர்களைக் கட்டிப் போட்டனர். பின்பு அணைக்கட்டின் மதகுகளை நோக்கி விரைந்தனர்.

அப்போது -

"நில்" என்று கம்பீரம் கலந்த கட்டளையைக் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான் ஆதித்யன். அங்கே தீ பந்தங்கள் ஒளியில் குதிரையின் மீது மன்னர் சேகர வர்மனும், அவரைச் சுற்றி வீரர்களும்.

"ஆதித்யா! நீ அணைக்கட்டை நோக்கிச் செல்வதை என் ஒற்றன் மூலம் அறிந்தேன். அணைக்கட்டைத் திறந்துவிடத்தான் போகிறாய் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால் உனக்குத் தெரியாமலேயே உன்னைப் பின் தொடர்ந்தேன். அணைக்கட்டைத் திறந்துவிட்டால், முல்லை நாட்டிற்குத் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கும். என் மகனுக்குப் பெண் கொடுக்க மறுத்த அந்த முல்லை வேந்தனுக்குப் புத்தி புகட்டத்தான் அந்த நாட்டிற்குத் தண்ணீர் கிடைக்கக் கூடாது. அந்த நாட்டின் தண்ணீருக்குக் கஷ்டப்பட வேண்டும். விளை நிலங்கள் காய வேண்டும். பஞ்சத்தால் முல்லை வேந்தனும் கலங்க வேண்டும் என்பதற்காகத்தான் நான், மந்திரி, சேனாதிபதியிடம் அணைக்கட்டைத் திறந்து விடக் கூடாது என்று பதினைந்து மாதங்களுக்கு முன்பே உத்தரவு போட்டேன்.

"இன்றுவரை அந்த உத்தரவு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது நான் எதிர்பார்த்தபடி மக்கள் பயிர்த் தொழில் செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர். முல்லை நாட்டுப் பயிர்கள் வாடினால் நமக்கு என்ன நஷ்டம்?" மன்னர் கோபத்தோடு வினவினார், குதிரையிலிருந்து இறங்கிக் கொண்டே.

சில நொடிகள் பயங்கர அமைதியில் கலந்தன. அந்த அமைதியை ஆதித்யன்தான் கலைத்தான்.

"தந்தையே! நான் கூறுவதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். நான் சிறுவனாக இருந்தபோது பந்து விளையாடிக் கொண்டிருந்த எனக்கும் என் தங்கை ஜெயந்தினிக்கும்



மீன்களைப் பற்றி படிக்கும் துறைக்கு இக்தியாலஜி என்று பெயர்.

தொகுப்பு : வ.வினோத்குமார்

சண்டை வந்துவிட்டது. தான் வென்ற கர்வத்தில் அவள் என்னைப் பயங்கரமாக கேலி செய்தாள். எனக்கு அவள்மீது அடக்க முடியாத கோபம். அவளுக்கு ரோஜாப்பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் நம் தோட்டத்து மூலையில் இருந்த ரோஜாச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றக் கூடாது என்று தோட்டக்காரனுக்கு உத்தரவு போட்டேன். எனக்குப் பயந்து கொண்டு தோட்டக்காரனும் செடிகளுக்கு நீர் ஊற்றவில்லை. மாலை நேரத்தில் அரண்மனை தோட்டத்துக்குப் பக்கம் வந்த தாங்கள், வாடிய ரோஜாச் செடிகளைப் பார்த்ததும் தாங்களும் வாடி விட்டீர்கள். தோட்டக்காரன் மூலம் நடந்ததை அறிந்த தாங்கள் என்னைக் கூப்பிட்டு என்ன சொன்னீர்கள் தெரியுமா?''

மன்னர் யோசித்தபடி தீவட்டி ஒளியில் மகனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஆதித்யா! உன் தங்கையோடு விளையாடியதில் அவளோடு கோபித்துக் கொண்டு செடிகளுக்கு நீர் ஊற்றாதே என்று உத்தரவு போட்டுவிட்டாய். அவள் மீது கோபம் இருந்தால் செடிகள் என்ன செய்தன? உனக்கு நீர் தராவிட்டால் எப்படி தவிப்பாய்? அதே போலத்தானே செடிகளும். மரம் செடி, கொடிகள், தண்ணீர் இவை எல்லாமே இறைவன் நமக்காகக் கொடுத்தவை. இவன் பகைவன் என்றோ இவன் நண்பன் என்றோ தண்ணீர் நினைப்பதில்லை. ஏன்! தனக்குத் தீமை செய்பவனுக்கும்கூட தண்ணீர் நன்மையே செய்கிறது. அதேபோல நீயும் விருப்பு வெறுப்பு இன்றி, உயர்ந்த உள்ளத்தோடு வாழ வேண்டும் என்று தாங்கள் சொன்னது என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. தாங்கள் எனக்குச் சொன்ன அறிவுரை இன்று தங்களுக்கும் பொருந்தாதா?''

மன்னரால் பதில் சொல்ல முடியவில்லை. இளவரசன் தொடர்ந்தான். ''அணைக்கட்டு நீரை முல்லை நாட்டிற்கு அனுப்பக் கூடாது என்று தாங்கள் ரகசியமாகப் போட்ட உத்தரவை நான் கேட்டு விட்டேன். பருவ மழையும் பெய்யவில்லை. அணைக்கட்டும் திறந்து விடப்படாததால், முல்லை நாட்டுப் பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. இது பாவமில்லையா! மன்னருக்குத் தண்டனை என்று மக்களுக்குத் தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.''

மன்னர் பதிலைத் தேடிக் கொண்டிருந்தார்.

''தந்தையே! முல்லை நாட்டுப் பயிர்கள் உயிர் வாழ அணைக்கட்டைத் திறந்து விடச் சொல்லட்டுமா? அல்லது...''

கோபத்தால் மூடிக் கிடந்த மன்னர் கேசவ வர்மனின் மனக் கதவுகள் திறந்து கொண்டன. மகன்மீது கோபம் வரவில்லை. தன்னைவிட தன் மகன் உயர்ந்த உள்ளத்தோடு, மனித நேயத்தோடு நடப்பதைப் பார்த்ததும் அவர் உள்ளம் பெருமிதத்தால் பூரித்தது. ''மகனே! நீ ஜெயித்துவிட்டாய். இனி வழக்கம்போல நம் அணைக்கட்டிலிருந்து நீர், முல்லை நாட்டிற்குச் செல்லும். வீரர்களே! கதவுகளைத் திறந்துவிடுங்கள்'' - மன்னர் உத்தரவிட்டார்.

மன்னரின் மனமாற்றம் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. தன் ஒற்றர்கள் மூலம் நடந்தது அத்தனையும் கேள்விப்பட்ட முல்லை நாட்டு மன்னர், இப்படிப்பட்ட உயர்ந்த உள்ளம் கொண்ட இளவரசர் ஆதித்யன் தான் தனக்கு மருமகனாக வரவேண்டும் என்று முடிவு எடுத்தார்.

தானே நேராக வேதகிரி நாட்டிற்குச் சென்று, மன்னர் கேசவ வர்மனிடம் மன்னிப்புக் கேட்டார். விமரிசையாக தன் மகளை ஆதித்யனுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். ●



செய்ல் ஃபிஷ் மீன்களில் மிக வேகமானது. அதன் வேகம் ஒரு மணி நேரத்துக்கு 95 கி.மீ.

# க்விஸ் மாஸ்டர்!




**வாகை சூட வயது தடையில்லை**

சென்னையில் அண்ணா நகர் ஜெய கோபால் கரோடியா பள்ளியில் எட்டாவது படிக்கும் விஷ்ணு சரணைப் பார்த்ததும் அவனது வாண்டு நண்பர்கள் ''வாங்க க்விஸ் மாஸ்டர், இன்னிக்கு எங்களுக்கு என்ன கேள்வி?'' என்று ஜாலியாகப் பேச்சைத் துவக்குகிறார்கள். விஷ்ணுவின் நண்பர்கள் சொல்லுவது சும்மா நகைச்சுவைக்காக அல்ல. விஷ்ணு சரண் உண்மையிலேயே 'க்விஸ் மாஸ்டர்' தான். ஜெயா தொலைக் காட்சியில் வாரம் ஒரு முறை திங்கட்கிழமை மாலை ஒளி பரப்பாகும் Kids-Q வினா - விடை நிகழ்ச்சியை நடத்துபவர் விஷ்ணு சரண்தான். அதில் பங்கு கொள்கிறவர்கள் ஐந்தாவதிலிருந்து ஏழாவது வரை படிக்கும் மாணவ, மாணவியர். இயக்குனர் எழுதிக் கொடுக்கும் கேள்விகளை மட்டும் கேட்டு நிகழ்ச்சியை முடிப்பது விஷ்ணு சரணின் பணியல்ல. கலந்து கொள்ளும் மூன்று அணிகளும் சமமான அளவில் மார்க் பெற்று விட்டால் டை பிரேக்கர் கேள்வியைக் கேட்க வேண்டிய பொறுப்பு விஷ்ணுவுடையது. பல எபிசோட்களில், விஷ்ணு அவனுடைய கேள்வியைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

''சின்ன வயதிலிருந்தே பையன் ரொம்ப துரு துரு'' என்கிறார் அப்பா வெங்கட சுப்பிரமணியன். மத்திய அரசு ஊழியர். அம்மா பகவதி ஆசிரியை. ''அது என்ன, இது என்ன? இது எப்படி, அது எதற்காக? என்று கேள்விகளால் துளைத்து விடுவான்.







• அப்பாவுடன் விஷ்ணு

அவனுடைய ஆர்வத்திற்குத் தீனி போடும் விதமாக நிறையப் பொது அறிவு புத்தகங் கள் வாங்கிக் கொடுப்பேன். நாடுகள், அதன் வரலாறுகள், தலைநகரங்கள் ஆகிய வற்றைத் தெரிந்து கொள்வதில் மிகவும் அக்கறை காட்டுவான். பள்ளியில் க்விஸ் அணியிலும் இருக்கிறான்'' என்கிறார் வெங்கட சுப்பிரமணியன்.

**மீ**னாட்சி கல்லூரி நிர்வாகம் பள்ளி மாணவர்களுக்காக வைத்த கட்டுரைப் போட்டியில் ராமகிருஷ்ணரைப் பற்றி எழுதி பரிசு வாங்கியிருக்கிறான் விஷ்ணு. படம் வரைவதிலும் ஆர்வம் உண்டு. காம்லின் படப் போட்டியிலும் பரிசு வாங்கியிருக்கிறான். பள்ளி சார்பாக பல க்விஸ் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு வாங்கியிருக்கிறான். "எனக்கு மிக ஊக்கம் கொடுப்பவர்கள் ஆசிரியைகள் தான்" என்கிறான். காலையில் எழுந்த வுடன் தமிழ் பேப்பரை ஒரு அசை அசைக்காமல் காபி சாப்பிடமாட்டானாம். "பள்ளியிலிருந்து வந்ததும் கம்ப்யூட்டரில் உட்கார்ந்து விளையாட்டு சிடிக்களை பார்த்து தள்ளுவான். வலைத் தளங்களுக் குள் புகுந்து அறிவை வளர்த்துக் கொள் வான். இது தவிர வார்த்தை விளையாட்டு அவனுக்கு மிகவும் பிடித்த ஒன்று என்கிறார் வெங்கட சுப்பிரமணியன். படிப்பிலும் சோடை போகவில்லை.

"எந்தத் தொலைக்காட்சியில் க்விஸ் நிகழ்ச்சி வந்தாலும் கட்டாயம் பார்த்து விடுவேன். குறிப்பாக, சோனி தொலைக் காட்சியில் டெரிக்கோப்ரையன் நடத்தும் நிகழ்ச்சியை விடமாட்டேன். இது தவிர சித்தார்த் பாசு நடத்தும் க்விஸ் எனக்குப் பிடிக்கும். நமது பொதிகை தொலைக் காட்சியில் டாக்டர் சுமந்த்ராமன் நடத்தும் விளையாட்டு க்விஸ் நான் விரும்பிப் பார்க்கும் ஒன்று. நேயர்களோடு அவர் கலந்துரையாடும் பாணியும் நிகழ்ச்சியை விறு விறுப்பாக நடத்தும் லாவகமும் ரொம்பப் பிடிக்கும்" என்று சொல்லுகிறான் விஷ்ணு.

**ஜெ**யா தொலைக்காட்சி வாய்ப்பு எப்படி வந்தது?


"சென்ற பிப்ரவரியில் ஜெயா தொலைக் காட்சி க்விஸ் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு இரண்டாவது பரிசு பெற்றான். அவனது சுறுசுறுப்பையும் ஆர்வத்தையும், அறிவுக் கூர்மையையும் பார்த்த இயக்குனர் ஜெய. நாதன் "நீயே நிகழ்ச்சியைத் தொகுத்தளிக் கலாமே?" என்று ஊக்கமளித்தார். உடனே குரல்வளம், நிகழ்ச்சியை வழங்கும் பாணி ஆகியவை குறித்து சோதனை நடத்தி அவற்றிலும் ஓ.கே. ஆகி விஷ்ணு க்விஸ் மாஸ்டராக நிகழ்ச்சி நடத்த தேர்ந்தெடுக் கப்பட்டான்'' என்கிறார் வெங்கட சுப்ர மணியன். படப்பிடிப்புக்காக சில நாள் லீவு போட வேண்டியிருக்கிறதே என்ற வருத் தம் விஷ்ணுவுக்கு இருந்தாலும் பள்ளி நிர்வாகம் கொடுக்கும் ஊக்கம் அவனுக்கு உற்சாகத்தைக் கூட்டுகிறது.

எதிர்காலத்தில் க்விஸ் மாஸ்டரா வதுதான் திட்டமா?

"என் லட்சியம் பொறியியல் படிப்பு. இதுதவிர பகுதி நேரமாக தொலைக் காட்சியில் க்விஸ் நடத்தும் வாய்ப்புக் கிடைத்தால் செய்வேன்'' என்கிறார் விஷ்ணு.

- ப்ரியன்

படங்கள் : மீடியா ராமு



# திறமைகளைக் குறைக்கிறதா டி.வி.?

விவாத மேடை

ஒரு மாதமாகவே விவேக் ஒழுங்காக டென்னிஸ் பிராக்டிஸ்க்கு வருவதில்லை. எப்பொழுதும் ஏதாவது புத்தகங்களைப் படிக்கக் கேட்டு நச்சரிப்பவன், இப்பொழுது ஒன்றும் கேட்பதில்லை. மற்ற நண்பர்களைப் பார்த்துப் பேசுவதும் கிடையாது என சில நண்பர்கள் கூறியதைக் கேட்டதும் ப்ரியாவுக்கு வருத்தமாக இருந்தது. 'என்ன ஆச்சு இந்த விவேக்குக்கு?'

ப்ரியா உடனே விவேக் வீட்டுக்குச் சென்றாள். விவேக் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான். "வா, ப்ரியா" என்று கேட்டுவிட்டு டி.வி. சீரியலில் மூழ்க ஆரம்பித்தான்.

"என்ன விவேக், நான் உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கேன். நீ என்னடான்னா, ஒப்புக்குப் பேசிட்டு டி.வி. பார்க்க ஆரம்பிச்சிட்டே?" என்றாள் ப்ரியா.

சற்று அமைதி காத்தவன் விளம்பரம் வரவும் "என்ன சொன்னே?" என்று கேட்டான்.

"நீ ஏன் டென்னிஸ் பிராக்டிஸுக்கு வரதில்லை?" - ப்ரியா.

"அடபோ இல்லை ப்ரியா. சரி. நீ வந்த விஷயத்தைச் சொல். எனக்கு வேலை இருக்கு."

"என்ன பெரிய வேலை?"

"ப்ரியா, இவனுக்கு வேலை ஏதும் கிடையாது. எனக்கு ஒரு சின்ன உதவிகூட செய்ய மாட்டேங்கிறான். புத்தகங்கள் படிக்கிறதில்லை. விளையாடப் போறதில்லை. எப்பொழுதும் டி.வி. முன்னாடி உட்கார்ந்து கொண்டு சீரியல், சினிமா, கார்ட்டூன்னு தூங்கற நேரம் தவிர பார்த்துக்கிட்டே இருக்கான்" என்றாள் விவேக்கின் அம்மா வருத்தத்துடன்.

"ஏன்டா இப்படி ஆயிட்டே? லீவில் பார்க்க ஆரம்பிச்சே சரி. இப்ப பள்ளி திறந்தும் இப்படி இருந்தீன்னா எப்படி படிக்க ஆர்வம் வரும் சொல்லு?" என்றாள் ப்ரியா.

"நீங்க கவலைப்படுற மாதிரி எதுவும் நடக்கலை. நல்லா படிப்பேன்" என்றான் விவேக் டி.வி. பார்த்தபடி.

"டி.வி.யைப் பொழுது போக்குக்காகவும், பொது அறிவு விஷயங்களுக்காகவும் பார்க்கறது தப்பில்லை. பொழுது இருக்கிறதே டி.வி. பார்க்கத்தான் என்று நினைக்கிறே பார், அது தான் தப்பு. நீ



இப்படி இருக்கிறதால உன்னோட படிக்கும் ஆர்வம் குறைஞ்சு போயிருக்க. விளையாடற ஆர்வம், நட்பு கூட குறைஞ்சு போனது உனக்குப் பெரிய விஷயமா படலையா விவேக்?"

"நீ சொல்றது உண்மைதான் ப்ரியா. டி.வி. என்னை முழுமையாக ஆக்கிரமிச்சிருக்கு. ஆனால் உடனடியா மாத்திக்க என்னால முடியும். டென்னிஸ் பிராக்டிஸ் போகலாமா?" என்றபடி பேட்டை எடுத்துக் கொண்டு நடந்தான் விவேக்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எழுதி அனுப்புங்கள்.

- தம்பிப் பயல்

# ஃபிரெஞ்சு ஓபன் சாம்பியன்கள்!

விளையாட்டு உலகம்

ஃபிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஃபிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன.

ஜூன் 5ந் தேதி பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் ரஷ்யாவைச் சேர்ந்த அனஸ்டாஸியா மிஸ்கினாவும் அதே நாட்டைச் சேர்ந்த எலினா டெமன்டைவாவும் மோதினர்.


59 நிமிடங்கள் நடந்த பரபரப்பான போட்டியின் இறுதியில் 6 - 2, 6 - 1, என்ற நேர் செட்களில் மிஸ்கினா எலினாவை வென்று கோப்பையைக் கைப்பற்றினார்.

107 ஆண்டு கால ஃபிரெஞ்சு ஓபன் வரலாற்றில் பட்டம் வென்ற முதல் ரஷியர் என்ற சிறப்பை மிஸ்கினா பெற்றிருக்கிறார். மிஸ்கினாவின் வயது 22.

கடந்த மூன்று ஃபிரெஞ்சு ஓபன் பெண்கள் ஒற்றையர் போட்டியின் இறுதியில் ஒரே நாட்டைச் சேர்ந்த இருவரே இறுதிச் சுற்றில் விளையாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. 2002ஆம் ஆண்டு அமெரிக்காவின் வில்லியம்ஸ் சகோதரிகளும், 2003ல் பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின், கிளைஸ்டர்ஸ் ஆகியோரும் இறுதி




• காஸ்டன் காடியோ



• மிஸ்கினா

ஆட்டத்தில் விளையாடியுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியும் ஜூன் 6ந் தேதி நடைபெற்றது. இதிலும் அர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த காஸ்டன் காடியோ, கில்லர்மோ கோரியா ஆகியோர் மோதினர். 0-6, 3-6, 6-4, 6-1, 8-6 என்ற செட் கணக்கில் காஸ்டன் காடியோ, கில்லர்மோ கோரியாவைத் தோற்கடித்தார். 25 ஆண்டுகளுக்குப் பிறகு அர்ஜென்டினாவுக்குக் கிடைத்த ஆண்கள் ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது. காடியோவுக்கு வயது 25.



# சிரிக்கும் நாய்!

நெட் பிட்ஸ்

ஃபேஷன் ஷோக்களில் விதம் விதமாய் உடை யணிந்து கொண்டு, முடி அலங்காரம் செய்து கொண்டு ஸ்டைலாக வலம் வரும் அழகிகளை டி.வி.யில் பார்த்திருப்பீர்கள். இப்படி வலம் வருகிறபோது இன்னதான் அணிந்து வருவது ஸ்டைல் என்று ஒரு வரைமுறையே இல்லை என்பது கீழே உள்ள படத்தை உற்றுப் பாருங்கள் புரியும். என்ன தெரியவில்லையா? இந்த பெண்ணின் தலையை கவனியுங்கள். அவர் கட்டிக் கொண்டிருப்பது ஒரு ஹை ஹீல்ஸ் செருப்பு!



நாய் கூட சிரிக்குமா? கம்ப்யூட்டர் கைவண்ணத்தால் குரைக்கிறதோ இல்லையோ பல் இளிக்க வைக்க முடியும்.

ஒரு ஜோக்.

ஒரு பள்ளிக் கூடத்தில், மாணவர்களை, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போய், காவல் நிலையத்தின் அவசியம், வேலை நடக்கிற முறை போன்ற விவரங்களை விளக்கிச் சொன்னார்கள்.

அங்கே, 'திருடர்கள் ஜாக்கிரதை' என்ற தலைப்பில் பத்து திருடர்களின் புகைப்படமும், அவர்கள் மீதான குற்றங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

அதைப் பார்த்து விட்டு, ஒரு வால் பையன் இன்ஸ்பெக்டரைக் கேட்டான் : "ஏன் சார், இவங்க எல்லாம் திருடங்கன்னு உங்களுக்குத்தான் தெரியுமே. இவங்களை போட்டோ பிடிக்கிறபோதே, ஆளையும் பிடிச்சு ஜெயிலில் போட்டிருக்க வேண்டியது தானே. விட்டுட்டீங்களே!"

இன்ஸ்பெக்டர் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போனார்.

அடுத்து பொது அறிவு சம்மந்தமான கேள்விக்குப் பதில் தெரிந்து கொள்வோமா? வானத்தில் பறவைகள் பறப்பதை நாம் பார்க்கிறோம். அதிகபட்சம், எவ்வளவு உயரம் வரை வானில் அவற்றால் பறந்து செல்ல முடியும்?

பறவை எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் சரி. அங்கே, அந்தப் பறவை தங்கு தடை இல்லாமல் சுவாசிக்க காற்று அதாவது ஆக்ஸிஜன் இருக்க வேண்டும் என்பது முக்கியம். தவிர, காற்று அழுத்தம் ரொம்பக் குறைவாக இருந்தால், பறவைகளால், சிறகை நன்கு அசைத்து பறப்பதும் சிரமமாக



இருக்கும்.

விமான ஓட்டிகள் கூறும் தகவலின்படி விமானம் 27 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும்போது கூட, வானத்தில் பறவைகளைப் பார்க்க முடியும். மிக உயரப் பறக்கும் திறன் வாய்ந்த பறவைகளில் கழுகு முக்கியமானது. அமெரிக்காவில் ஐவரி கோஸ்ட் என்ற பகுதியில் 37 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்துவிட்டு கீழே இறங்கியபோது, விமானத்தின் வெளிப் பகுதியில் கழுகு ஒன்று மோதி, கீழே விழுந்ததற்கு ஆதாரமாக அதன் உடலின் சதைப் பகுதி கொஞ்சமும், இறகுகளும் ஒட்டிக் கொண்டு இருந்ததை விமான நிலையத்தில் பதிவு செய்து இருக்கிறார்கள்.

கிரிக்கெட்டில் அடுத்தடுத்து மூன்று விக்கெட் வீழ்த்தினால் 'ஹாட்ரிக்' என்று சொல்கிறோமே. இதன் பின்னணி என்ன?

19ம் நூற்றாண்டில்தான் ஹாட்ரிக் என்ற வார்த்தை அறிமுகமானது என்று சொல்லப்படுகிறது. கிரிக்கெட் மேட்ச்சின்போது, பந்து வீசுகிறவர் அடுத்தடுத்து மூன்று பந்து வீச்சுகளில், மூன்று விக்கெட்களை வீழ்த்துவது என்பது மாபெரும் சாதனை. (அதுவும் அந்தக் காலத்தில் சுறுசுறுப்பும், விறுவிறுப்பும் கொண்ட ஒரு நாள் போட்டிகள் எல்லாம் கிடையாது). அந்தச் சாதனையைப் பாராட்டி, பந்து வீச்சாளருக்கு அவர் சார்ந்த கிரிக்கெட் கிளப், ஒரு புத்தம்புது தொப்பியை வாங்கிப் பரிசளித்து கௌரவித்துப் பாராட்டுவது வழக்கமாக இருந்தது.

புதிய தொப்பி பெருவதற்கு இப்படிக் கூட ஒரு ஐடியா உண்டு என்பதைக் குறிப்பிடும் விதமாக, இந்தச் சாதனைக்கு ஹாட்ரிக் என்று பெயரிட்டு விட்டார்கள்.

இப்போது கிரிக்கெட்டுக்கு மட்டுமே சொந்தமானது இல்லை. பொதுவாக எல்லா விளையாட்டுகளிலுமே 'அடுத்தடுத்து மூன்று' என்கிறபோது பயன்படுத்தப்படுகிறது.


**1952** ஜூன் 28ம் தேதி, பின்லாந்தைச் சேர்ந்த அழகி, மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்று கிரீடம் சூட்டப்பட்டார். அவரது பெயர் அர்மி குசெலா. பதினெட்டு வயதில் பட்டம் வென்றார் அவர். வழக்கமாக, ஓர் அழகிப் போட்டியில் வெற்றி பெறுகிறவருக்கு, முந்தைய வருடம் அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்தான் கிரீடம் சூட்டுவது வழக்கம்.

ஆனால், 1952ல் தானே முதல் தடவையாக மிஸ் யுனிவர்ஸ் போட்டி நடந்தது. எனவே அந்த வருடம் ஜெயித்தவருக்கு கிரீடம் சூட்டினவர் அமெரிக்காவின் பைபர் லூரி என்கிற ஹாலிவுட் நடிகை.

**- எஸ். சந்திரமௌலி**

## கோடை விடுமுறைப் போட்டி I - முடிவு

**மே** இதழில் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டாலும் 8 பேர் மட்டும் தான் சரியான விடையளித்திருந்தனர்.




**ரூ.25/- பரிசுப் பெறுவோர் :**

1. டெ. ஜோஷ்வின், ஐரேனிபுரம், குமரி மாவட்டம்
2. வி. மனோரஞ்சிதா, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி
3. டி. நிவேதிதா, ஹோலி ஏஞ்சல்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சேலம்
4. ஆர். உமாஸ்ரீ, திசையன்விளை, திருநெல்வேலி
5. வி.கலா தேவி, இடைப்பாடி, சேலம் மாவட்டம்
6. ப. சிவசங்கரி, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்
7. வெ. நாகலெஷ்மி, எட்டாம் வகுப்பு, கம்பம், தேனி மாவட்டம்
8. ஆர். ஸ்ரீ மீனாட்சி, சென்னை

***சரியான விடை :*** *1. இலை 2. ஆமை ஓடு 3. கம்பளிப்புழு 4. நட்சத்திர மீன் 5. பூண்டு 6. மாதுளை 7. விதை 8. எலுமிச்சம் பழம்.*


பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


# யானை முட்டை!

கதை : ராஜிராதா, திருச்சி
படம் : சேகர்




# பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள் :

1. தொப்பியில் இறகு 2. எலியின் கை 3. அலாவுதீன் சட்டை 4. அலாவுதீன் தொப்பி 5. பன்றியின் காது 6. கூண்டில் வாத்து 7. வாள் 8. டிராகன் பல் 9. முயலின் விரல் 10. முயலின் கண்கள்


'ப' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் பொருட்களின்
பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

